உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25] விசுவாவசு ஆண்டு மாசித் திங்கள் 10—3—66 [இதழ் 4



தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீகுருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

மாதா பிதாச்சுற்றம்
 என்று மயங்கினையே
நீதான் தனுவாகி
 நின்றனையே—ஈதெல்லாம்
பொய்யென் றறிந்தனையே
 பூரணா னந்தவெள்ளம்
மெய்யென் றறிந்தாயே
 நில். (38)

ஆசிரியர் :-
வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-
வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25 | 10-3-66 | இதழ் 4

உட்பொருள்

எண்		பக்கம்
1	ஒளியான திருமேனி	... 113
2	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை	.. 118
3	ஒலி ஒலி மாறியதில்லை	... 126
4	சித்தாந்த வினாவிடை	... 129
5	சிங்கம்	... 134
6	அப்பர் வாக்கில் அம்மை	... 139
7	வேலூர் இலவச சித்த வைத்தியசாலை	... 147
8	செய்திகள்	... 150
9	எதிர்காலம்	... 165
10	Extract from the Visitors' Book	125, 128, 133, 138, 149, 168

வேலூர்
ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் தரிசித்தல்.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25] விசுவாவசு - மாசி - 10—3—66 [இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

ஒளியான திருமேனி

கடவுள் உண்டு என்னும் கொள்கை ஆத்திகம்; அஃது இல்லை என்னும் கொள்கை நாத்திகம். என்ருலும், கடவுள் உண்டு என்று கொள்வதோடுமட்டும் ஆத்திகம் நிறைவு பெற்றுவிடாது; அக்கொள்கைக்கேற்பக் கடவுளை எவ் வகையிலேனும் மன மொழி மெய்களால் வழிபடும்பொழுதே ஆத்திகம் பயனுடையதாகும். இது பற்றியே திருவள்ளுவ நாயஞர் தம் நூலின் தொடக்கத்தே, கடவுள் உண்டு என்பதைத் தெளிவுறுத்தியபின்னர், அடுத்து, கடவுளைத் தொழுதலின் இன்றியமையாமையை வலியுறுத்தி ஓதினர்.

வழிபாடு, ‘மனம் மொழி மெய்’ என்னும் கருவிகளைக் கொண்டு செய்யப்படுவது. ஆனல், ‘கடவுள்’ என்பதற்கே,

மன மொழி மெய்களாகிய அனைத்தையும் கடந்து நிற்பது என்பதுதான் பொருள். மன மொழி மெய்களைக் கடந்து நிற்கும் பொருளை, மன மொழி மெய்களால் வழிபடுதல் எவ்வாறு? அஃது இயலாததுதான். ஆயினும், கடவுட் பொருள், அருளே - இரக்கமே வடிவமானது; ஆதலின், அது நமது இயலாமையை அறிந்து இரங்கிப் பலவகை வடிவங் களைக் கொண்டு, நம் மனமொழி மெய்களுக்கு அகப்படும் வகையில் வந்து நிற்கின்றது. அவ்வாறு வந்து நின்ற திருமேனிகள் பலவற்றைப் பெரியோர் பலர் பற்பல இடங் களில், பற்பல காலங்களில் கண்டுள்ளனர். ஆகவே, அவ்வடிவங்களில் கடவுளை நாம் கண்டு வழிபடுதல் இயலும்; அவ்வாறு செய்யப்படும் வழிபாடுதான் நம் நாட்டில் பண்டு தொட்டு இன்றுகாறும் நடைபெற்று வருகின்றது.

கடவுட் பொருளாகிய இறைவன், நம் பொருட்டுக் கொள்ளும் திருமேனிகள், ‘அருவம், உருவம். அருவுருவம்’ என மூவகைப்படும். அருவத்திருமேனி புறக்கண்ணிற்குப் புலனாகாது, அகக்கண்ணிற்கு மட்டுமே புலனாவதாகும். அருவுருவத் திருமேனியும், உருவத்திருமேனியும் புறக் கண்ணிற்குப் புலனாகும். அவற்றுள் உருவத்திருமேனி, முகம், கை, கால் முதலிய உறுப்புக்கள் பலவும் உடைய தாய்ப் பல்வேறு கோலங்களிற் காணப்படும். அருவுருவத் திருமேனி, அத்தகைய உறுப்புக்கள் இன்றி, ஒளிப்பிழம்பாய் நிற்கும். இப்பிழம்பிலிருந்து மேற்கூறிய உருவத்திருமேனி களில் எதுவும் தோன்றலாம். ஆகவே. அத்திருமேனிகள் பலவற்றிற்கும் இது முதற்கருவாதல் வெளிப்படை. இவ் வொளித்திருமேனியே இலிங்க மூர்த்தம். இலிங்க மூர்த்தம் ஏனைய எல்லாத் திருமேனிகட்கும் முதலாதல் பற்றியே, திருக்கோயில்களில் அது மூலமூர்த்தமாய் விளங்குகின்றது. மற்றைய மூர்த்தங்களெல்லாம், இலிங்க மூர்த்தத்தைச் சூழ அமைந்து விளங்குதல் காணலாம்.

மேலும், அருவத்திருமேனி போலக் காணப்படாமலும் போகாது, உருவத்திருமேனிகள்போல யாதானும் ஒரு வகைத் திருமேனியாய் மட்டும் வரையறைப்பட்டும் நில்லாது,

இரண்டற்கும் இடையே, எல்லாத் திருமேனிகட்கும் பொது வாய் விளங்கி நிற்றலால், அருவுருவத் திருமேனியாகிய இலிங்கமூர்த்தம் சிறப்புடைத்தாகின்றது. எனவே, இலிங்கத் திருமேனியே வழிபாட்டிற்குச் சிறந்ததென்பது விளங்கும். விளங்கவே, இலிங்கத்திருமேனி, கடவுட் கொள்கையுடைய எல்லாச் சமயத்தாராலும், அவரவருக்கு இயலும் திறத்தால் வழிபடுதற்குரியதே என்பதும் அறியலாகும். ஆயினும் சமய வேறுபாட்டால், சைவ சமயிகள் தவிர, ஏனையோர் அதனைக் கைவிட்டனர். கைவிட்டமை மாத்திரமன்று; சிலசமயங்களில் அதனை இகழவும் செய்கின்றனர்.

இறைவன் உலகத்தைப் படைக்கப் புகும்பொழுது, முதலில் அருவத்திருமேனிகொண்டு, உலகிற்கு முதற்காரண மாகிய மாயையை பொதுவாகப் பகுப்பின்றி நோக்கி, 'இஃது இனி உலகமாய்க் காரியப்படத்தக்கது எனப் பொதுவாகக் கருதுவான். அந்நிலையில் அவன் சிவமும் சத்தியுமாய் நிற்பான். பின், அருவுருவத் திருமேனி கொண்டு அதனைப் பகுதிப்படச் சிறப்பாக நோக்கி, 'இப்பகுதி இவ்வாறு ஆகத் தக்கது' எனச் சிறப்பாகக் கருதுவான். அந்நிலையில் அவன், 'சதாசிவன்' எனப்படுவான். ஆதலின், இலிங்க மூர்த்தம் சதாசிவ மூர்த்தமேயாம். 'இஃது இவ்வாறு ஆகத் தக்கது' எனக் கருதியபின், உருவத்திருமேனி கொண்டு, 'அங்ஙனமே ஆகுக' என்று கருதுவான். அங்ஙனம் கருதிய அளவில் அஃது அஃது அவ்வவ்வாறே ஆகிவிடும். அவை அங்ஙனம் ஆகுமிடத்து, இறைவனும் பல்வேறு வகைப்பட்ட வடிவும், பெயரும், தொழிலும் பெற்று நிற்பான். அவையெல்லாம் 'மாகேசுர மூர்த்தங்கள்' எனப்படும்.

'மாகேசுர மூர்த்தங்கள் இருபத்தைந்து' என ஆகமங் கள் வரையறுத்துக் கூறும். சதாசிவ மூர்த்திக்கும் ஐந்து முகம், பத்துக்கை முதலியவை கூறப்படினும், அவை யெல்லாம், படைத்தல் முதலியவற்றைச் செய்யும் சத்திகளை அங்ஙனம் அருவுருவத் திருமேனியில் பாவிக்கும் பாவனா ரூபங்களேயாம். ஆகவே, சதாசிவ மூர்த்தமாகிய இலிங்க மூர்த்தம், ஒளிப்பிழம்பாய் நிற்கும் அருவுருவத் திருமேனியே

யாம். இவ்வொளிப்பிழம்பு விளக்கின் சுடரிலும், வேள்வித் தீயிலும் இயற்கையில் தோன்றிக் காட்சியளிக்கும். ஆதலின், அவையிரண்டும் சிறந்த வழிபாட்டுக்கு உரியவாயின. செயற்கையாக அமைக்கப்படும் இலிங்க உருவத்தை வழிபட மறுப்பவர்களும், இயற்கையில் அமைந்து விளங்கும் இவ்விலிங்க உருவங்களை அன்போடு வழிபடுவர். இயற்கையில் அமைந்த ஒளிப்பிழம்புதான், வழிபாட்டின் நிமித்தம் செயற்கையில் அமைத்து வழிபடப்படுகின்றது.

இனி, நாம் காணும் விளக்கும், வேள்வித் தழலுமாகிய தீப்பிழம்பேயன்றி, இறைவன் தானே தனது சத்தியால் பிரம விட்டுணுக்களின்முன் அடிமுடி காணப்படாத நீண்ட தழற் பிழம்பாய் நின்ற வரலாற்றைப் புராணங்கள் கூறும். உண்மையில் அதுவே இலிங்கத் திருமேனி. இறைவன், இலிங்கவடிவாகிய அருவுருவத் திருமேனியில் தோன்றுவதே, உலகத் தோற்றத்தின் தொடக்கமாதலின், இதுவே, அருவமும், உருவமும் ஆகிய கூறுபாடுகளையுடைய உலகத்திற் கெல்லாம் காரணம் எனப்படுகின்றது.

" காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் பூண்டார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் "

என்பது சேக்கிழார் வாக்கு. 'லிங்கம்' என்பதன் சொற் பொருளே இவ்வாறு உலகத்தைத் தொழிற்படுத்தல் என்பது தான் என்று கூறுவர். உலகத்திற்குக் காரணமான ஒளிப் பிழம்பாய் நிற்கும் இறைவனைத் திருநாவுக்கரசர் பலவகை ஒளியாக எடுத்தோதிப் புகழ்கின்றார்.

" காரொளிய திருமேனிச் செங்கண் மாலும்
கடிக்கமலத் திருந்தவனும் காணா வண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கம் தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. "

என்பது அத் திருப்பாட்டு.

"பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே"

என்று மணிவாசகப் பெருமான் அருளியவாறு, மாலும் அயனும் அடிமுடி தேடி அறியாத மூல இலிங்கமாகிய ஒளி யான திருமேனியனாய் இறைவன் தோன்றிய காலமே, '**சிவராத்திரி**' எனப்படுகின்றது. அதனால், சிவராத்திரியில் நான்கு யாமமும் திருக்கோயில்களிலும், மடாலயங்களிலும், இல்லங்களிலும் சிவபெருமானை இலிங்கத்திருமேனியில் கண்டு வழிபடுதல் நிகழ்கின்றது.

திங்கள்தோறும் வரும் சிவராத்திரியிலும், மாசித்திங்க ளில் வரும் சிவராத்திரியே **மகாசிவராத்திரி**. ஏனெனில், அதுவே சிவபெருமான் இலிங்கத் திருமேனியுடன் தோன்றிய காலம். இவ்வாண்டுச் சிவராத்திரி நிகழ்ந்த மாசித்திங்கள் இன்னும் முடியவில்லை. ஆதலின், அதுகாலை வழிபட்ட இலிங்கத் திருமேனி வழிபாட்டின் சிறப்பு; அன்பர்கட்கு இன்னும் நினைவில் நின்று இன்பம் பயப்பதாம்.

'இறைவன் ஒளியான திருமேனியன்' என்பது, இவ்வாற்றால் மட்டுமன்று, அவன் ஞானமே வடிவினன் என்பதையும் குறிப்பதாம். இறைவன், தான் ஞானமே வடிவாய், உயிர்கள் தோறும் அவற்றின் அறிவுக்கறிவாய் நின்று அறிவித்தலை, நாவுக்கரசர்,

"பரஞ்சுடர்ச் - சோதியுட் சோதியாய்நின்ற சோதியே"

என்று குறித்தருளினர். ஆகவே, அகத்தும் புறத்தும் இறைவன் நிற்கும் ஒளியான திருமேனியை உணர்த்தும் சிவராத்திரிநாள் என்றும் சிந்தையில் மறக்கற்பாலதன்று. அதன்வழியே அத்திருமேனியை என்றும் நினைந்து, வாழ்த்தி வணங்கி வழிபட்டு வளம்பெறுவோமாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

வித்தும் விளைவும்

எவ்விதையை மாக்கள் பயிரிட்டார் இட்டவரே
அவ்விதையின் போகம் அருந்துதல்போல் - செவ்விதாய்த்
துன்மார்க்கம் செய்வார்க்குத் தோன்றும்பிறப்பு; முத்தி
சன்மார்க்கம் சொக்கநா தா.

எல்லார் கருத்தும் இநமா உரைக்கறியேன்
நல்லாங்கு தீங்கிதென நாடறியேன் - எல்லாரும்
நீராரும் வேணி நிமலா மதுரையில்வாழ்
ஆரூரா சொக்கநா தா.

உறையிறந்த பேரின்ப உல்லாச வீட்டில்
திரையிறந்து தூங்கித் திளையேன் - வரைபெருகப்
பேசுவேன் யானென்றே; பெற்றவர்தம் உள்ளத்துக்
காசுவே சொக்கநா தா.

— குருஞானசம்பந்தர்.

யாதொரு செயலும் பயனை அடிப்படையாகக் கொண்டதே. ஒரு செயலைச் செய்பவர் அதனைப் பயன்கருதிச் செய்பினும், பயன் கருதாது செய்யினும், அச்செயல் தன் பயனைக்கொடுத்தே தீரும். செயல்களால் உண்டாகும் பயனுக்கு, 'விளைவு' என்பது பெயர். இது வேளாண் தொழிலில் வழங்கும் வழக்குப்பற்றிக் கொள்ளப்பட்டது. வேளாண் தொழிலால் உண்டாகின்ற பயனை, 'விளைவு' என்று கூறுதல் அனைவரும் அறிந்தது.

வேளாண்மைத் தொழிலால் உண்டாகின்ற பயனுக்குக், காரணமாகின்றவை பல இருப்பினும், வித்து ஒன்றே அதற்கு முதற் காரணம். மற்றவை துணைக்காரணமாயும், நிமித்த காரணமாயும் அமைவனவே.

" வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் "

என்று திருவள்ளுவரும், வித்து ஒன்றினையே சிறப்பாகஎடுத்துக் கூறியதும் இதுபற்றியேயாம், உழுதல், உரம் இடுதல் முதலிய துணைக்காரணங்களை எல்லாம் தனியாக ஒரு குறளில்,

" ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு "

என அவர் தொகுத்துக் கூறியுள்ளார். எனவே, விளைவிற்கு முதற்காரணம் வித்தே என்பது புலனாகின்றது.

" செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும் "

" இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் "

எனக் கூறப்பட்ட நிலமும் விளைவுக்குத் துணைக்காரணமே. பயிர் விளைவுக்கு முதற்காரணம் வித்தாதல்போல, உலகில் உள்ள உயிர்களின் இன்ப துன்ப விளைவிற்கு வினையே முதற்காரணம். இதனை, ' தினைவிதைத்தவன் தினையறுப்பான்; வினைவிதைத்தவன் வினையறுப்பான் ' என வழங்கும் நமது நாட்டுப் பழமொழி நன்கு விளக்குகின்றது.

" நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும் "

என்றார் திருவள்ளுவர்.

வித்தாகிய முதற்காரணம் தனது பயனைத் தருதற்கு, நீர் முதலிய துணைக்காரணங்கள் சேரவேண்டும். அதுபோல, வினையாகிய முதற்காரணமும் தன் பயனைத் தருவது, முயற்சியாகிய

துணைக்காரணம் சேரும்பொழுதே யாம். ஆகவே, 'முயற்சி தானே பலனளிக்கின்றது? வினை எங்கே இருக்கிறது?' என்று கேட்பது பொருத்தமற்றதாகும்.

உலகில் நற்பயன்களும் தீப்பயன்களும் சிற்சில சமையங்களில் அவற்றிற்கு முன்னிலையாய் நிகழ்ந்த செயல்களின் அளவைக் காட்டிலும் மிக அதிகமாக விளைதல் கண்கூடு. அவ்விடங்களில் வினையாகிய முதற்காரணத்தின் ஆற்றல் நன்கு புலனுகின்றது. இதனை, புதைப்பொருள் கிடைத்தல், பொறிகிழி நேர்படல் முதலியவற்றில் வைத்துச் சாத்திரங்கள் விளக்குகின்றன.

நல்லனவும் தீயனவும் ஆகிய வித்துக்கள் இயற்கையில் கிடக்கின்றன. அவற்றை ஒருவன் பிறவுயிர்களுக்கு ஆகுமாறு செய்வதுதான், வினையை விதைத்தலாகும். அவ்வாறு விதைத்துவிட்டால், அவ்விதை பக்குவப்பட்டு விதைத்தவனுக்குத் தனது பயனைக் கொடுத்துவிடுகின்றது.

" வெவ்வினை செய்யும் மாந்தர்
உயிரெனும் நிலத்து வித்தி
அவ்வினை வினையுள் உண்ணும் அவ்விடத்து "

என்று திருத்தக்கதேவர் தமது சீவகசிந்தாமணியில் கூறுகின்ருர். அதனை,

" நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்; நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர் "

என்னும் திருக்குறளின் உரையில், 'உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு விளைவும் அதுவே' எனப் பரிமேலழகர் சுருக்கமாகக் குறித்தார். ஆகவே நன்மையாயினும் தீமையாயினும் பிறர்க்குச் செய்தது தனக்கு ஆதல் தெளிவாகின்றது. இதனைத்தான் 'வினைவிதைத்தவன் வினை அறுப்பான்' என்கின்ருர்கள். தினை விதைத்தோன் பனையையும், பனைவிதைத்தோன் தினையையும் பெறமுடியாது. அதுபோலவே, பிறருக்குத் தீமை செய்தோன் நன்மை அடையான்; நன்மை செய்தோன் தீமை அடையான். இந்த உண்மை மக்கள் மனத்தில் ஊன்றிவிடுமாயின், உலகில் தீமை நிகழ்வதற்கு வழியே இல்லை. அதனல்

இக்கருத்தைப் பெரியோர் அனைவரும் ஒருமுகமாக வலியுறுத்து கின்றார்கள். ஆகவே எங்கள் குருஞானசம்பந்தரும் முதலிற் காட்டிய வெண்பாவில்,

' எவ்விதையை மக்கள் பயிரிட்டார் இட்டவரே
அவ்விதையின் போகம் அருந்துதல்போல் ''

என்று தமது அருள்வாக்கில் நமக்கு நினைவூட்டுகின்றார்கள்.

உலக நிலையில் பிறருக்கு நன்மை செய்தல் நல்வழி; தீமை செய்தல் தீவழி. ஞானநிலையில் எதைச் செய்வதும் தீமை தான். அஃதாவது, நன்மை செய்யினும் அது தன் பயனைக் கொடுப்பதற்குப் பிறவியை உண்டாக்கும். பிறவி உண்டாயின், அதுவழியாக, எல்லாத் துன்பங்களும் வந்து சேர்ந்துவிடும். ஆகையால், பிறவியை அறுத்துக்கொள்ள விரும்புபவர்கள் எந்த ஒன்றையும் செய்யமாட்டார்கள்.

எந்த ஒரு செயலையும் செய்யாமல் உலகில் எவ்வாறு வாழ முடியும் என்ற ஐயம் எழலாம். யாதொன்றையும் செய்யா திருத்தல் என்பதற்கு, மன வாக்குக் காயங்களால் ஒன்றையும் செய்யாதிருந்துவிடுதல்' என்பது பொருள் அன்று; உலகில் வாழும் வரையிலும் அவ்வாறு இருக்கவும் இயலாது. மற்று என்னை எனின், மனவாக்குக் காயங்களாகிய முக்கரணங்களும் அவற்றின் செயல் திறங்களும் நம்முடையனவே என்று கொண்டு, 'நான் இவர்க்கு இதனைச் செய்வேன்; அவர்க்கு இதனைச் செய்யமாட்டேன்' என்று நினையாது, உடல் பொருள் ஆவி அனைத்தும் இறைவன் உடையனவே என்று அவன் பால் ஒப்புவித்து யாதொரு செயலையும் அவன் பணியாகவே செய்வதுதான் ஒன்றும் செய்யாதிருத்தலாகும். இந்நிலையில் செயல்கள் பல நிகழ்ந்தாலும், நம்மால் நிகழ்வது ஒன்றும் இல்லையாகின்றது. ஆகவே, அவற்றால் வரும் பயனும் நமக்கு இல்லாதொழியும். ஒழியவே நல்வினையாயினும் தீவினையாயி னும் தன் பயனைத் தருதற்பொருட்டு நமக்குப் பிறவியைத் தரமாட்டா. இதுதான் நல்வழி என்றும், இதற்குமாறாக, 'நான் இதைச் செய்வேன்; அதைச் செய்யமாட்டேன்' என்று கருதிச் சிலவற்றைச் செய்யாதொழிதலுமே தீவழி என்றும் ஞானநெறியிற் சொல்லப்படுகின்றன.

'நான் இதனைச் செய்வேன் அல்லது செய்யமாட்டேன்' என்று முனைத்தெழுவதே செருக்கு எனப்படும். இச் செருக்கு உடையவர்கட்குப் பிறவியும், அதனை ஒட்டி ஏனைய துன்பங் களும் இவ்வுடம்பு நீங்கிய பின்பும் வந்தடையும். அவ்வாறன்றி உடல் பொருள் ஆவி அனைத்தையும் இறைவன்பால் ஒப்புவித்து அருள்வழியில் நிற்பவர்க்கு, இவ்வுடம்பு உள்ள நிலையிலும் இன்பமே உண்டாகும். இதனையே மாணிக்கவாசகர்,

" அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே "

என்று அருளிச்செய்தார். எனவே. இந்த உயர்ந்த நெறியே நன்னெறி, இதற்கு மாறான நெறி தீநெறி. நன்னெறி சன் மார்க்கம்' என்றும், தீநெறி, 'து[illegible] என்றும் சொல்லப் படும். எங்கள் ஆதிபரமாசாரிய மூர்த்திகளும், யான் எனது என்னும் செருக்கற்று, ஆண்டவனது அருள்வழியில் நின்று பிறப்பை நீக்கிக்கொள்ளும் நெறியே சன்மார்க்கம் என்றும், 'நன்மை யாயினும் தீமையாயினும் நான் செய்கின்றேன்' என்று செருக்கிச் செய்து பிறப்பை உண்டாக்கிக்கொள்ளும் நெறியே துன்மார்க்கம் என்றும் விளக்குதற்கு முன்சொல்லிய அத்திரு வெண்பாவிலே,

" துன்மார்க்கம் செய்வார்க்குத் தோன்றும் பிறப்பு; முத்தி
சன்மார்க்கம் சொக்கநா தா "

என்று அருளிச்செய்தார்கள். 'செய்வார்க்குத் தோன்றும்' என்னும் சொற்றொடர், பின்னைய வரிகளிலும் வந்து சேர்ந்து பொருளைத்தருகின்றன. அஃதாவது, 'துன்மார்க்கம்செய்வார்க்குப் பிறப்புத்தோன்றும்; சன்மார்க்கம் செய்வார்க்கு முத்தி தோன் றும்' என்று பொருள் அமைந்துள்ளது. எனவே, பிறப்பை உண் டாக்கும் யான் எனது என்னும் செருக்குநெறியே துன்மார்க்கம்;

பிறப்பை நீக்குவதாகிய அருள்நெறியே சன்மார்க்கம் என்பது தெளிவு.

> "யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்"

என்றார் திருவள்ளுவர்.

'துன்மார்க்கம் வித்து; அதன் விளைவு பிறப்பு' என்பதையும், சன்மார்க்கம் வித்து; அதன் விளைவு முத்தி என்பதையும் விளக்கவே, எங்கள் குருமூர்த்திகள் மேற்காட்டிய உவமையைக் கூறியருளினார்கள். எனவே, துன்மார்க்கமாகிய வித்தை விதைத்தவர்கள் பிறவியாகிய விளைவைத்தான் பெறமுடியும்; சன்மார்க்கமாகிய வித்தை விதைத்தவர்களே முத்தி என்னும் விளைவைப் பெறுவார்கள்.

'விளைவுகட்கு, 'போகம்' என்னும் பெயர் இருத்தலை அனைவரும் அறிவர். எங்கள் குருமூர்த்திகளும், 'அவ்விதையின் போகம் அருந்துதல்போல' எனக் குறித்தலைக் கண்டோம். இங்குக்கூறிய விளைவுகளில் முன்னையது வினைப்போகம்; பின்னையது சிவபோகம் 'செருக்கு' என்னும் விதையை விதைத்தவர்கள், வினைப்போகத்தைப் பெறுவர். அருளில் அடங்கி இருத்தலாகிய, 'அடக்கம்' என்னும் விதையை விதைத்தவர்கள், சிவபோகத்தைப் பெறுவர். யான் எனது என்னும் செருக்கற்று, அருளில் அடங்கியிருப்பதே, 'மோனநிலை' எனப்படுகின்றது. இந்த மோனமாகிய வித்தை இட்டுச் சிவபோகத்தை விளைத்துப் புசிக்கும் முறையைத் தாயுமானவர், ஒரு பாடலில் விரிவாகக் கூறுகின்றார்.

> "காராரும் ஆணவக் காட்டைக் களைந்தறக்
> கண்டகங் காரமென்னும்
> கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி
> காணத் திருத்தி மேன்மேல்
> பாராதி அறியாத மோனமாம் வித்தைப்
> பதித்துஅன்பு நீரா கவே
> பாய்ச்சிஅது பயிராகு மட்டும்மா மாயைவன்
> பறவைஅணு காதவண்ணம்

நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டம்எய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பாரமென்றும்
ஆராரும் அறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

சைவ சமயத்தில் சொல்லப்படும் சாதனங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு. இவற்றுள் முதல் மூன்றும், சாலோகம், சாரூபம், என்னும் பதமுத்தி களையே தரும். பதமுத்திகளை அடைந்தோர் மீளப்பிறத்தல் கூடும். இறுதியாயுள்ள ஞானமே பிறப்பற்ற பரமுத்தியைத் தரும். ஆதலின், அதுவே, 'சன்மார்க்கம்' எனப்படுவதையும், மற்றைய சரியை முதலிய மூன்றும் தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம் என்று சொல்லப்படுவதையும் இங்கு நினைத்தல் வேண்டும். இந்தச் சன்மார்க்கத்தையே எங்கள் ஆதிபரமாசாரிய மூர்த்திகள் சன்மார்க்கம் என்கிறார்கள். ஆனால் பிற பிற சமயவாதிகள் வேறு சிலவற்றைச் சன்மார்க்கம் என்று சொல்லலாம்; அவர்கள் சொல்வனவற்றை யெல்லாம் எடுத்துச் சொல்வதோ, அவைகளை ஆராய்வதோ எனக்கு வேண்டாத ஒன்று; அதனால், யான் அச்செயலில் புகவில்லை என்பதையே அடுத்த வெண்பாவில் அருளினார்கள். அதில் அவர்கள் தம் ஆன்மார்த்த மூர்த்தியை மதுரையிலும் திருவாரூரிலும் வாழ்கின்ற ஒளி பொருந்திய சடையையுடையவ னாகக் குறித்திருத்தல் கருதத்தக்கது. (எல் ஆரும் - ஒளி பொருந்திய)

'செருக்குநிலை நீங்கி அருள்நிலையில் நின்று, சிவபோக விளைவை இடையறாது துய்க்கும் நிலை வரவில்லையே; அதனை அருள வேண்டும், சொக்கநாதா' என்று அடுத்த வெண்பாவில் வேண்டுகின்றார்கள். அவ்வேண்டுகோளில், 'பெற்றவர்தம் உள்ளத்துக்கு ஆசுவே' என்று இறைவனை அவர்கள் அழைக் கின்றார்கள். ஆசு - பற்றுக்கோடு. இறைவனை அடைந்த அடியார்கட்கு அவன்தான் பற்றுக்கோடு; வேறு பற்றுக்கோடு இல்லையன்றோ!

'யான் என்றும், எனது என்றும் பல சொற்களை மலை போலப் பேசுகின்றேன்' என்பதை, 'வரைபெருகப் பேசுவேன் யான் என்றே' என்றும். இந்நிலை இடையே புகாமல், சிவ போகத்திலேயே அழுந்தியிருத்தல் வேண்டும் என்பதை, 'உரையிறந்த பேரின்ப உல்லாச வீட்டில் திரையிறந்து தூங்கித் திளையேன்' என்றும் அருளினார்கள்.

" உரையிறந்தால் உன்னும் உணர்விறந்தால் மாயைத்
திரையிறந்தால் காண்கின்ற தேவை வரைபெருக
வாசிப் பதும்நாவால் வாழ்த்துவதும் நாடகமாப்
பூசிப் பதும்சுத்தப் பொய் "

என்று அவர்கள் சிவபோகசாரத்தில் அருளியிருப்பதால் 'திரை' என்பது மாயையே-அஃதாவது உலகப்பற்றே என்பது நன்கு விளங்கும். உலகப் பற்றாகிய மாயைத் திரையை நீக்கினால்தான் சிவபோகத்தைப் புசிக்க இயலும். அந்த நிலையைப் பெற்ற அருளாளர்களே மாயைத்திரை மறைக்கின்றது என்பார்களாயின், நம்போன்றவர்கள் நிலை என்ன! ஆயினும், நம்போன்றவர்களுக்கு அந்த உயர்நிலை கிடைப்பதற்கு வழியாகவே இத்தகைய அருள்வாக்குக்கள் வெளிவந்து உலாவுகின்றன. அவற்றை ஓதி உணர்ந்து இடையறாத பேரின்பத்தில் திளைத்தலே நமது கடமை.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

This is the first time for me to visit this temple. I have not seen any other temple kept so clean with a holy religious atmosphere in this temple. The temple is kept clean, the atmosphere is pervading to the religion and there is sbsolute silence when we enter the shrine. I offer my sincere thanks to Dharmapuram Adhinam for maintaining the temple and express my gratitude for giving me an opportunity to visit the temple and offer my humble prayers to Lord Vaideeswara Swami.

(Sd.) T Venkatadri

19—2—66 Judge, High Court, Madras.

ஒலி ஒலி மாறியதில்லை

உலகில் பல்வேறு சக்திகள் செயற்படுகின்றன. என்றாலும் அவை அனைத்தும், 'நல்ல சக்திகள், தீய சக்திகள்' என்னும் இருவகையில் அடங்கும். நல்ல சக்திக்கும் தீய சக்திக்கும் எப்பொழுதும் போர் இருந்துகொண்டே இருக்கின்றது. அதில் நல்ல சக்திக்கே ஆண்டவன் அருள் துணை செய்கின்றது; அதனால், இறுதி வெற்றி நல்ல சக்திக்கே கிடைக்கின்றது. இந்த உண்மையைத்தான், புராணங்கள் பலவகையாக வெளியிடுகின்றன.

தேவர்கள் நல்ல சக்தி; அசுரர்கள் தீய சக்தி. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் எப்பொழுதும் போர். அந்தப் போரில் வெற்றி கிட்டுவதற்குத் தேவர்கள் ஆண்டவன் துணையை நாடுகின்றனர்; ஆனால், அசுரர்கள் அவ்வாறின்றித் தங்கள் பலத்தினாலேயே தாங்கள் வெற்றியடைய எண்ணுகின்றனர். அஃது இயல்வதில்லை. தேவர்களே ஆண்டவன் துணையால் வெற்றி எய்துகின்றார்கள். இத்தகைய வரலாறுகள் பலவற்றைப் புராணங்களிற் காணலாம். இவற்றால் இறைவனது ஆற்றலுக்கு ஏனைய ஆற்றல்கள் எவையாயினும், அவை ஓர் அணுமாத்திரமாம் என்பதும், அத்தகைய ஆற்றலை இறைவன் தன்னையடைந்த அடியார்கள் பொருட்டுச் செயற்படுத்தி, அவர்கட்கு வரும் துன்பங்களை ஒரு நொடியிற்போக்கி அவர்களைக் காக்கின்றான் என்பதும், இவ்வுண்மையை உணர்ந்து நல்லோர்கள் அவனை அடைகின்றனர் என்பதும் விளங்கும். அவ்வகையில் திருநாவுக்கரசு நாயனார் ஓர் அரிய பாடலை அழகுபட அருளிச் செய்கின்றார்.

" மூவா உருவத்து முக்கண் முதல்வ மீக்கூர் இடும்பை
காவாய் ஏனக்கடை தூங்கு மணியைக்கை யால்அமரர்
நாவாய் அசைத்த ஒலிஒலி மாறிய தில்லைஅப்பால்
தீயாய் எரிந்து பொடியாய்க் கழிந்த திரிபுரமே "

'தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி' என்ற மூன்று அசுரர்கள் இருந்தனர். அவர்கள் தம் தவவலிமையால் பொன், வெள்ளி, இரும்பு என்பவற்றாலாகிய மூன்று பறக்கும் கோட்டைகளை யுடையவராய், ஒருவராலும் வெல்ல ஒண்ணாத ஆற்றலுடன் உலகெங்கும் சென்று, தேவர் முதலிய அனைவரையும் துன்புறுத்தி

வந்தனர். தேவருள் ஒருவரும் அவர்களை வெல்லமாட்டாத வராய்ப் பெருந்துன்பத்திற்கு ஆளாகி, 'என் செய்வோம்' என்று ஏக்கமுற்று வருந்தினர்.

அந்நிலையில் முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் ஒருவரே அவர்களை அழிக்க வல்லவர் என்றறிந்து தேவர் அனைவரும் கூட்டமாகச் சென்று கயிலையில் சிவபிரான் சந்நிதியில் வீழ்ந்து வணங்கி முறையிட்டனர். சிவபெருமான் அவர்கள்பால் இரக்கங்கொண்டு மகாமேருவை வில்லாகவும், வாசுகியை நாணாக வும், திருமால், அக்கினி, வாயு இவர்களை அம்பாகவும் கொண்டு போர்க்கோலம் பூண்டு பூமியாகிய தேரில் பூட்டப்பட்ட வேத மாகிய குதிரைகளைப் பிரமதேவன் சாரதியாய் நின்று செலுத்தச் சென்றார். அதையறிந்து மூன்று அசுரர்களும், தங்கள் மூன்று கோட்டைகளுடன் வந்து எதிர்த்தனர்; ஆனால் சிவபெருமான் அவர்களைக் கண்டு ஒரு கோபச் சிரிப்புச் சிரித்த அளவிலே அதினின்றும் தோன்றிய தீயினால் மூன்று கோட்டைகளுடன், மூன்று அசுரர்களும் தம் குலத்தொடு சாம்பாராய் அழித்தொழிந் தார்கள். தேவர்கள் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டு சிவபெரு மானைப் பலவாறாகப் புகழ்ந்து வணங்கித் தம் தம் பதவியில் இனிது வாழ்ந்தனர். இவ்வரலாற்றையே நாவுக்கரசர் இப் பாடலில் அழகுபடக் குறிக்கின்றார்.

சிவபெருமான் முழுமுதற் கடவுள். ஆதலின், அப்பெரு மானைத் தேவர்கள், 'முதல்வ' என அழைத்தார்கள். ஏனையோருக்கில்லாத அவனது மூன்று கண்கள் ஏனையோருக் கில்லாத அவனது முதன்மையைக் காட்டுகின்றன; அதனால், 'முக்கண் முதல்வ' என்றார்கள். பிறப்பிறப்பு இல்லாத பெருமானாகலின், 'மூவா உருவத்து முக்கண் முதல்வ' என்று போற்றினார்கள். தேவர்கள் பட்டது இடும்பை-துன்பம் மட்டுமா? அல்ல; பெருந் துன்பமல்லவா? அதனால், 'மீக்கூர் இடும்பை காவாய் - எம்பெருந்துன்பத்தை நீக்கிக் காத்தருள்வாய்' என்று கூவிமுறையிட்டார்கள். சிவபெருமானுக்கு எங்கும் கண்; எங்கும் செவி; என்றாலும் தேவர்கள் தமது ஆற்றாமையால், அப்பெருமானது கடைதூங்கும் மணியை - திருக்கோயில் வாயிலில் கட்டப்பட்ட மணியை அசைத்து ஓசையுண்டாக்கினர்.

முற்காலத்தில், அரசர்களது அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணி என்பது ஒன்று கட்டப்பட்டிருக்கும். உள்ளே சென்று அரசனைக் காண இயலாதபொழுது வருத்தமுற்ற குடிமக்கள் அதனை அசைப்பார்கள். அவ்வோசையைக் கேட்டு அரசன் அவர்களை அப்பொழுதே அழைத்து அவர்கள்

குறையைத் தீர்ப்பான். திருவாரூரில் மனுச்சோழன் வாயிலில் இருந்த ஆராய்ச்சி மணியைப் பசு ஒன்று அடிக்க, அதுகேட்ட மனுச்சோழன், அதன் துன்பத்தையறிந்து, அதன்பொருட்டுத் தன்மகனைத் தானே தன் தேர்க்காலில் இட்ட செய்தி பலரும் அறிந்தது. சோழன் பசுவின் துன்பத்தைப் போக்கமாட்டாமையால், தானும் அதுபோன்ற துன்பத்தில் ஆழ்ந்துவிட முடிவு செய்தான். இறைவனுக்கு அதுபோல் தேவர்கள் துன்பத்தைப் போக்க முடியாத நிலை உண்டோ! இல்லை. அதனால், தேவர்கள் உண்டாக்கிய மணி ஒலித்த ஒலி அடங்கவே இல்லை; அதற்குள்ளே அவர்களது பெருந் துன்பத்திற்குக் காரணமாய் இருந்த திரிபுரங்கள் தீயாய்ப்பற்றி எரிந்து பொடியாயின - சாம்பலாயின; 'என்னே வியப்பு!' என்று வியக்கின்றார், அப்பர்.

இறைவனை அடைக்கலமாக அடைந்தவர்கட்குத் துன்பம் ஏது! ஒருகால் துன்பம் வருமாயினும், அஃது ஒளிமுன் இருள் போல் அப்பொழுதே கெட்டொழியும் என்பதையே இது போன்ற வரலாறுகளால் நாம் அறிகின்றோம். இன்னும், "முப்புரம் என்பது மும்மல காரியம்" என்ற திருமந்திரத்தால், அஞ்ஞானத்தை விளைக்கின்ற மும்மலங்களை அழித்தொழிப்பவன் இறைவன்' என்பதை, முப்புரம் எரித்த வரலாறு குறிப்பிடுகின்றது என்றும் அறிகின்றோம். ஆதலின், இத்தகைய அருட்டிருப்பாடல்களை ஓதினால், எல்லாத் துன்பங்களும் நீங்கி, எல்லா இன்பங்களையும் பெறுதல் திண்ணமாம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaidhianathaswamy Devasthanam, Vaithiswarankoil

I have come here for the first time, as per the wish of the Lord. I am very happy to find the perfect cleanliness that prevails and the dignity of worship and the fanatics therefor. I offer my humble respects to all connected with this and offer my prayers to the Lord.

(Sd) G. H. Thakore
L. I. C.
Zonal Manager, Madras.

23—2—66

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 25, இதழ் 3, பக்கம் 72 இன் தொடர்ச்சி)

அந்தக்கரணங்கள் உயிராகாமை

மாணாக்கன் : தூல தேகம் உயிராகாது என்று தெரிவித்த பின்னர், அதன் பகுதியாகிய ஐம்பொறிகள் உயிராம் என்று சிலர் கருதியதுபோல, சூக்கும தேகம் உயிராகாது என்று உணர்த்திய பின்னரும், அதன் பகுதிகள் எவற்றையேனும் உயிரென்று கொள்ளலாம் எனக் கூறுவார் உண்டோ?

ஆசிரியர் : உண்டு. சூக்கும தேகம் என்பது, அந்தக் கரணம், தன்மாத்திரை என்பவற்றால் ஆயது. அந்தக்கரணம், மனம் முதலியன. தன்மாத்திரை, பஞ்சபூதங்களின் முதனிலை. அவற்றுள், தன்மாத்திரையை உயிர் என்போர் இலர். ஏனெனில், அவை பஞ்சபூதங்களின் நுண்ணிலையே யாகலானும், பஞ்ச பூதம் உயிரல்ல என்பது பலர்க்கும் உடம்பாடாகலானுமாம்.

ஏனைய அந்தக் கரணங்களை மட்டும் உயிர் என்று கூறுவோர் உளர். அவர், 'அறிவு என்பது, அகத்தே ஐயம் ஆய்வு, துணிவு முதலிய வடிவில்தானே தோன்றுகின்றது? அவற்றைத் தவிர, அறிவு என்பது தனியாக எங்கே இருக்கின்றது? இல்லை. ஆகவே, ஐயம் முதலியனவற்றைச் செய்யும் மனம் முதலிய அந்தக்கரணங்கள்தாம் உயிர்; அவற்றிற்கு வேறாக உயிர் இல்லை' என்பர்.

மாணாக்கன் : ஆம்; அந்தக்கரணங்களின் தொழிற்பாட்டிற்கு வேறாய் அறிவின் தொழிற்பாடு என்பதொன்று தோன்றவில்லை. ஆதலின், மனம் முதலிய அந்தக்கரணங்களேதான் உயிரோ என்று நினைக்கவே தோன்றுகிறது.

ஆசிரியர்: அவ்வாறில்லை. தூல தேகத்திற் காணப்படும் ஐம்பொறிகளின் வேறாய் உயிர் இல்லை என்பவர்களும், காண்டல் கேட்டல் முதலிய தொழிற்பாடுகளின் வேறாய்

அறிவின் தொழிற்பாடு இல்லை என்றுதான் நினைக்கின்றனர். ஆயினும், மேற்கூறியவாறு ஆராய்ந்து பார்க்கும்பொழுது, ஐம்பொறிகள் உயிரல்ல என்பது விளங்குகின்றதன்றே? அதுபோலத்தான், மனம் முதலியவற்றின் தொழிற்பாடுகளுக்கு வேறாய் அறிவின் தொழில் இல்லை என எண்ணத் தோன்றுகின்றது. ஆயினும், உற்று நோக்கினால், அந்தக்கரணங்களும் உயிரல்ல என்பது விளங்கும்.

மாணாக்கன்: அவற்றை உற்று நோக்குதல் எவ்வாறு?

ஆசிரியர்: கண்முதலிய பொறிகள் புறத்திற் காணப்படுதலால், 'ஒரு தொழிலைச் செய்யும் பொறி, மற்றொரு தொழிலைச் செய்யாது' என்பது தெளிவாய்த் தெரிகின்றது. அஃதாவது, கண்ணைத் திறந்திருந்தால் உருவங்கள் காணப்படுதலும், கண்ணை மூடிக்கொண்டால், அவை காணப்படாமற் போதலும் நிகழ்வதால், கண் தவிர, வேறு பொறிகளுள் ஒன்றும் உருவத்தைக் காணமாட்டாது என்பது காட்சியினாலே தெளிவாக உணரப்படுகின்றது. இப்படியே மற்றைப் பொறிகளின் தொழிற்பாடும் நன்கறியப்படுகின்றன. ஆனால், அந்தக்கரணங்கள் சூக்குமமாய் இருத்தலால், அவற்றின் தொழில்களுள் ஒன்றன் தொழிலை மற்றொன்று செய்யமாட்டாது என்பதைக் காட்சியில் துணியமுடியவில்லை. ஆயினும், கருதல் அளவையால் அதனைத் துணிதல் வேண்டும்.

ஓர் உருவம் எதிர்ப்படுமாயின், அவ்வுருவத்தை, 'இஃது ஓர் உருவம்' என்று மட்டுந்தான் கண் அறியுமேயன்றி' அதற்குமேல் அதனைப் பற்றிக்கொண்டு, 'இஃது எவ்வுருவம்? மரமோ? மனிதனோ? என்று ஐயுறும் தன்மை கண்ணுக்கு இல்லை; அது மனத்தின் தொழிலே என்பது நன்கு விளங்குகின்றது. அவ்வாறே, ஐயுறுகின்ற ஒன்றே துணிதலைச் செய்யாது; ஏனெனின், ஐயமும் துணிவும் தம்முள் மறுதலையாகலானும், மறுதலைப்பட்ட இரண்டு தொழில்களை ஒரு காலத்தில் ஒரு கருவியே செய்யும் என்றல் பொருந்தாமையானும் என்க.

அந்தக்கரணங்கள் நான்கு என்பதும், அவற்றின் தொழில்களுள் ஒன்று செய்வதை மற்றொன்று செய்யாது என்பதும் தத்துவங்களின் இயல்புகளைக் கூறுமிடத்து நன்கு விளக்கப்படும். ஆகவே, அந்தக்கரணங்களையே உயிர் எனின், ஓர் உடலில் நான்கு உயிர்கள் உள்ளன எனப்பட்டு, முன்பு ஐம்பொறிகள் உயிர் என்றல் குற்றமாயினாற்போல, இதுவும் குற்றமாம்.

ஆகவே, ஐம்பொறிகளைக் கொண்டு காண்டல் முதலியவற்றைச் செய்வதாகிய உயிர் அவ்வைம்பொறிகளுக்கு வேறுதல்போல, மனம் முதலிய அந்தக்கரணங்களைக்கொண்டு ஐயுறுதல் முதலியவற்றைச் செய்யும் உயிர், அவ்வந்தக்கரணங்களுக்கு வேறுனதென்றே உணர்வாயாக.

பிராணன் உயிராகாமை

மாணுக்கன் : தூல தேகமும், அதில் உள்ள ஐம்பொறிகளும், சூக்கும தேகமும், அதில் உள்ள அந்தக்கரணங்களும் உயிரல்ல என்றபின், 'இதுதான் உயிர்' என்று குறிப்பிடுதற்கு உயிரை யன்றி வேறு ஒன்றும் இல்லையன்றே ?

ஆசிரியர் : இல்லாமற் போகவில்லை. பிராணவாயு - அஃதாவது மூச்சுக்காற்று இருக்கின்றது. அதனையே சிலர் உயிர் என்கின்றனர். ஏனெனில், உறக்கமும் இறப்பும் ஒன்றென்றே கூறலாம் 'உறங்குவதுபோலும் சாக்காடு' என்று திருவள்ளுவரும் கூறுகின்ருர். ஆயினும், உறக்கத்தில் உயிர் உண்டு என்றும், இறப்பில் உயிர் இல்லை என்றும் ஆவது எதனல்? உறக்கத்தில் பிராணவாயு - மூச்சுக்காற்று இருக்கின்றது : இறப்பில் அஃது இல்லை. ஆகவே, பிராணவாயுதானே உயிர் ? அதற்கு வேருய் உயிர் எங்கே உள்ளது ? என்கின்றனர்.

மாணுக்கன் : ஆம்! இது மிகவும் கடினமான தடையாகத் தான் இருக்கின்றது. 'பிராணன், உயிர்' என்பன ஒருபொருட் சொற்களாயும் வழங்குகின்றன அன்ருே ?

ஆசிரியர் : ஆராய்ந்து பாராதபொழுது எல்லாம் பொருத்தமாகத்தான் தோன்றும். ஆகவே, ஆராய்ந்து பார்த்தே உண்மையைத் துணிதல் வேண்டும்.

மாணுக்கன் : இதை எப்படி ஆராய்வது ?

ஆசிரியர் : உயிர் என்பது அறிவுடைப்பொருள் என்பதையும், காற்று அறிவில்லாத சடப்பொருள் என்பதையும் மறந்துவிட்டு இப்படித் திகைக்கின்ருய்.

மாணுக்கன்: ஆம்! அடிகள் சொல்வது உண்மையே. என்ருலும் மூச்சுக்காற்று அறிவுடையதே என்று வைத்துக் கொள்ளலாமன்ருே? ஏனெனில், மனம் முதலிய அந்தக் கரணங்கள்கூட, மூச்சு இயங்கும்பொழுதுதான் செயற்படுகின்

றன. ஆகவே, மனம் முதலிய அந்தக்கரணங்களையும், அவை வழியாக ஐம்பொறி முதலிய தூல தேகத்தையும் இயக்கி நிற்பது பிராணவாயுவே என்பது பொருத்தமாகின்றதன்றோ?

ஆசிரியர்: பொருத்தமாகாது. ஏனெனில், பிராணவாயு அறிவுடையதாயின், உறக்கத்தில் அஃது இருக்கவும் ஏன் அறிவு நிகழவில்லை? உறங்கும் பொழுது கள்வர் வந்து புகுவதை அறியாதிருத்தல் மட்டுமன்று; தூல தேகத்தின் மேலே பாம்பு ஏறிச்சென்றாலும் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன? அத்தூல தேகத்தின்கண் நின்று அறியும் அறிவுடைப்பொருள் அங்கு இல்லாமைதானே? ஆகவே, பிராணவாயுவை அறிவுடையது என்று கூறுதல் எப்படி?

மாணாக்கன்: உறக்கத்தில் பிராணவாயு இருப்பினும், அதற்குத் துணையாய் உள்ள கண் முதலிய புறக்கருவிகளும், மனம் முதலிய அகக் கருவிகளும் செயற்படாமையால் அதற்கு அறியும் ஆற்றல் இல்லையாயிற்று என்று கொண்டால் என்ன?

ஆசிரியர்: கருவிகளை இயக்கும் முதல்வன் பிராணவாயுவாயின், அஃது ஒடுங்காது செயற்பட்டுக்கொண்டிருக்க, அதனால் இயக்கப்படும் கருவிகள் செயற்படாது போயின என்றல் பொருந்துமோ? பொருந்தாது. ஏனெனில், ஒரு துறையில் தலைவன் முழு ஊக்கத்துடன் செயலில் முனைந்து நிற்கும் பொழுது, அவன் பணியாட்கள் அனைவரும் செயல் செய்யாது சோம்பி இருக்கின்றனர் என்றல் பொருந்தாது. மேலும் 'பிராணவாயு இல்லையானால் ஏனைய கருவிகளும் இல்லையாம்' என்னும் எதிர்மறைபோல, 'பிராணவாயு உள்ளதாயின். ஏனைய கருவிகளும் உள்ளனவாம்' என்று உடன்பாட்டிற் சொல்ல வாராமையால், கருவிகளை இயக்குவது பிராணன் என்பது துணியப்படாது, எனவே, பிராணவாயுவல்லாத வேறொன்றே கருவிகளை இயக்கும் தலைவன் என்பதும், அஃது உறக்கத்தில் பிராணவாயுவை இயங்கச்செய்து. ஏனைய கருவிகளினின்றும் நீங்கி ஒடுக்கம் பெற்றுள்ளது என்பதும், அது மீள எழுச்சியுற்று வரும்பொழுது, ஏனைய கருவிகள் இயங்கும் என்பதும், அவ்வாறு பிராணவாயுவையும், ஏனைய கருவிகளையும் எழுச்சியுற்று இயக்குவதும், ஒடுங்கி நின்று அவற்றை இயக்காது நீங்குவதும் ஆகிய அதுவே உயிர் என்பதும் புலனாகும். ஆகவே, பிராண வாயு உயிராகாமை அறிக.

மாணாக்கன்: உறக்கத்தில் புறப்பொருள் பற்றிய அறிவு நிகழவில்லை யாயினும், அகத்தில், 'சுகமாகத் தூங்கினேன்'

என்று பின்பு சொல்லத்தக்கதாகிய அனுபவம் நிகழ்கின்றதே ; அவ்வனுபவ அறிவைப் பிராணவாயுவுடையது என்றால் என்னை?

ஆசிரியர் : பிராணவாயு புறத்தில் இயங்கவும், புறவறிவு நிகழாமைக்குக் காரணங்கூற இயலாமையால், அஃது அறிவுடையதன்று என்பதே தேற்றம். மேலும், காற்று அறிவில்லாத சடப்பொருள் என்பது எல்லார்க்கும் உடன்பாடாக இருக்க, அதனை அறிவுடையதென்று மறித்து மறித்துக் கூறுதல் முருட்டுவாதமாகும். ஆகவே, 'சுகமாகத் தூங்கினேன்' என்று சொல்லத்தக்க அனுபவமும், பிராணவாயுவல்லாத வேறொன்றினுடையதே.

மாணாக்கன் : 'பிராணன், உயிர்' என்பன ஒருபொருட் சொற்களாக வழங்கப்படுவது ஏன் ?

ஆசிரியர்: அது சிறுபான்மை வழக்கேயன்றிப் பெரும்பான்மை வழக்கன்று. மேலும், சொற்களை வழங்கும் முறை அனைத்தும் செவ்வன் வழக்கல்ல ; பான்மை வழக்கும் உள்ளன. அவ்வகையில், உயிரைப் பிராணன் என்றல் பான்மை வழக்காம் ஆதலின், அதுபற்றி வருவதோர் ஐயமில்லை. ஆகவே, பிராணவாயு உயிரன்று என்பதனைக் கடைப்பிடித்துணர்வாயாக.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswami Devasthanam, Tirucadaiyur.

I desire that the commissioner of Hindu Religious Endowment Board should send a circular how the temples are kept clean by Sri Dharmapuram Adheenam Mutt. I am really surprise and pleased to see the temple in its cleanliness, in its maintaining the religious atmosphere.

My sincere thanks and regards to Sri Dharmapuram Adhinam Mutt.

(Sd.) T. Venkadatri,
Judge, H. C.
(High Court of Madras.)

20—2—66.

சிங்கம்

சிவநெறிச்செல்வர்
திரு. K. M. வேங்கடராமையா M. A.,

இலக்கியங்களில் :

காட்டில் வாழும் விலங்குகளுக்கு அரசாகத் திகழ்வது சிங்கம். அரிமா எனினும், மடங்கல் எனினும் சிங்கத்தையே குறிக்கும். சிங்கம் இருக்கும் இடங்களில் பிற விலங்குகள் செல்வதற்கும் அஞ்சும். இதனை,

"அரிமான் வழங்கும் சாரல் பிறமான்
தோடுகொள் இனநிரை நெஞ்சதிர்ந் தாங்கு"

என்று பதிற்றுப் பத்தில் குமட்டூர்க் கண்ணனார் பாடியுள்ளார்.

பல விலங்குகளும் ஒருங்கு சேரினும் வெல்ல ஒண்ணாத அத்தகைய வலிமை பொருந்தியது சிங்கமாகும். கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப் பாலையில் 'அரிமா அன்ன அணங் குடைத் துப்பின்' என்று கரிகாலனது வலிமைக்குச் சிங்கத்தை உவமை கூறியுள்ளார்.

சிங்கம் விலங்குகளுக்கு அரசாகத் திகழ்தலினாலேயே, மக்களுக்கு அரசாகத் திகழ்பவர்கள், தாம் அரசவையில் வீற்றிருப்பதற்கு இருக்கையாக அரியணையை அமைத்துக்கொண்டார்கள்.

பல்லவ அரசர்களுடைய இலச்சினைகளில் சிங்கமும் ஒன்று. சிங்க விலச்சினை போர்க் காலங்களில் இடைக்காலப் பல்லவர்களால் விடப்பட்ட பட்டயங்களில் காணப்படுகின்றன. கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீசயிலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளையாண்ட கதம்பர் என்ற அரசமரபினருக்கும் சிங்க இலச்சினை இருந்தது என்று தெரிய வருகிறது.

கொற்றவைக்கு வாகனம் சிங்கம் என்று செப்புவர்.

சாவா மூவாச் சிங்கம் :

சைவ சமயக்குரவருள் ஒருவராகிய திருநாவுக்கரசர் திருப்புகலூரில் பன்னெடு நாட்கள் சிவத்தொண்டு புரிந்திருந்தார். இறைவன் திருவடிநிழலை அணித்தாகப் பெற்ற பொழுது, 'எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே?' என்ற திருத்தாண்டகத்தை ஓதிச் சிவானந்த ஞான வடிவேயாகிச் சிவபெருமான் திருவடிக்கீழ் அமர்ந்தருளினர். இப்பதிகத்தில் இரண்டாவது திருப்பாடலில் தன்னை ஆட்கொண்டருளும் சிவபெருமானைச், 'சாவா மூவாச் சிங்கமே!' என்று விளித்தருளினர்.

தவராஜசிங்கம் :

தாயுமான சுவாமிகள் அருளிய பாடல்களில் **சித்தர்கணம்** என்பது ஏழாவது தலைப்பாக அமைந்துள்ளது. இதில் ஒன்பதாவது பாட்டில் சித்தர் கணத்தைத் '**தவராஜ சிங்கம்**' என்று குறித்திருக்கிறார்.

சிங்கம் கைகளிலும் கால்களிலும் கூரிய நகங்களைக் கொண்டது; சித்தர் கைகால்களில் கூரிய நகங்களை உடையரவர்.

சிங்கத்தின் இடை ஒடுங்கியதாக இருக்கும்; சித்தர்களும் இடுப்பு ஒடுங்கி இருத்தலோடு அவர்கள் மறைந்தும் (ஒடுக்கம்) வாழ்வர்.

சிங்கத்தின் தோல் பகல்போன்று ஒளிபெற்றிருப்பதோடு அது கம்பீரத்தோடும் தோற்றமளிக்கும்; சித்தர்கள் வெண்ணீறு சண்ணித்த மேனியராகி ஒளிபொருந்தித் திருவருள் பெற்று இறுமாந்து இருப்பர்.

சிங்கத்தினுடைய இமையானது மேல்நோக்கி இருக்கும்; அங்ஙனமே சித்தர் யோகநிலையில் மேல்நோக்கிய நாட்டம் உடையராய்த் திகழ்வர்.

சிங்கம் யானையைக் கொன்று வீழ்க்கும்; சித்தர் ஐம்புலக் களிறுகளை அடக்குவர்.

சிங்கம், புலி, மான் முதலியவற்றைக் கொன்று அவற்றின் தோல்களைத் தன் குகையில் கொண்டிருக்கும்; சித்தர் புலித் தோலையும் மான்தோலையும் ஆசனங்களாகக் கொண்டு இருப்பர்.

பனி வெயில் புகாத வானளாவிய பருத்த மரங்கள் அடர்ந்த காடுகளில் சிங்கம் உறையும்; சித்தர்களும் அந்தகைய அடர்ந்த காடுகளில் தவம் கிடப்பர்.

எனவே, விலங்குகளில் சிங்கம் அரசாகத் திகழ்வதுபோலச் சித்தர்களும் தவராஜ சிங்கங்களாகத் திகழ்வர். இங்ஙனம் பின் வரும் தாயுமானவர் பாடல் புகலும் :-

"பொற்பினெடு கைகாலில் வள்ளுகிர் படைத்தலால்,
போந்திடை ஒடுக்கமுறலால்,
பொலிவான வெண்ணிறு பூசியே அருள்கொண்டு
பூரித்த வெண்ணிர்மையால்,
எற்பட விளங்குகக னத்திலிமை யாவிழி
இசைந்துமேல் நோக்கமுறலால்,
இரவுபகல் இருளான கனதந்தி படநூறி
இதயம் களித்திடுதலால்,
பற்பல விதங்கொண்ட புலிகலையின் உரியது
படைத்துப்ர தாபமுறலால்,
பனிவெயில்கள் புகுதாமல் நெடியவான் தொடர்நெடிய
பருமர வனங்களாகும்
வெற்பினிடை உறைதலால், தவராஜ சிங்கமென
மிக்கோர் உமைப்புகழ்வர்காண்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே"

செற்றமில் புலவர் சிங்கம்:

குமரகுருபர சுவாமிகளைச் 'செற்றமில் புலவர் சிங்கம்' என்று திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் தாமியற்றிய குமரகுருபர சுவாமிகள் சரித்திரம் என்ற நூலுள் குறித்துள்ளார்.

குமரகுருபர சுவாமிகள் 17ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த முனிபுங்கவர். கந்தர் கலிவெண்பா முதலிய பன்னிரண்டு பிரபந்தங்களைப் பாடியருளியவர்; காசிக்குச் சென்று சகல கலா வல்லி மாலை பாடி இந்துஸ்தானி கைவரப்பெற்றார்; டில்லி பாதுஷாவைக் காணச் சென்றார்; அப்பொழுது இவருடைய தவப்பெருமையை அறியாத பாதுஷா தன் ஆசனத்தில் அமர்ந்தவண்ணமே இருந்தனன். மறுநாள் இறைவன் திருவருள் வசத்தால் ஓர் உயிருள்ள சிங்கத்தின் மேல் ஏறிக் கொண்டு சபையில் புகுந்தார். பாதுஷாவும் அவையிலிருந்தோரும் அஞ்சிப்பின், குமரகுருபரரை வணங்கி வரவேற்றனர்.

இவ்வாறு, செற்றமில் புலவர் சிங்கமாகிய குமரகுருபர சுவாமிகள் உயிருள்ள சிங்கத்தின் மேல் சென்றமையால் அவர்களைத் தவராஜ சிங்கம் என்றும் கூறலாம். திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் வெளியீடாகிய குமரகுருபர சுவாமிகள் வரலாற்றுப் பட விளக்கம் என்ற நூலில், " தவராஜ சிங்கம் தவப் பெருஞ் சிங்கத்நமர்ந்து அவைக்கேக அரசு எதிர்கொண்டது " என்று குறிக்கப்பட்டிருத்தலை இங்கு நினைவு கொள்ளல் தகும்.

தமிழ்ச் சிங்கம் :

குமரகுருபர சுவாமிகளுடைய மாணுக்கர் வெள்ளியம்பல வாண முனிவர். இவரியற்றிய நூல்களுள் முதுமொழிமேல் வைப்பு என்பதொன்று. பின்னிரண்டடிகளில் திருக்குறளையும் முன்னிரண்டடிகளில் குறட்பாக்களுக்கு விளக்கமாகச் சிவசம்பந்தமான கதைகளையும் அமைத்து இந்நூலை ஆசிரியர் பாடியிருக்கிறுர். இதுபோன்ற பிற நூல்களில் காணப்படாத வீட்டின் பால் என்ற ஒரு பகுதியும் இந்நூலில் காணப்படுகின்றது, வீட்டின்பாலில்கண்ட பத்துப் பாடல்களிலும் திருவருட்பயன் பத்துத் தலைப்புக்களில் கண்ட குறட்பாக்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்நூலில் முதற்பாட்டிலும், 57 ஆவது பாட்டிலும் சிவஞான போதத்தை அருளியவராகிய மெய்கண்ட தேவரைத் தமிழ்ச்சிங்கம் என்ற சொற்ருடரால் குறித்துள்ளமை அறியத் தக்கது :-

" எங்கும் உளன் இறைவன் என்றிரண்டாய் ஏத்து தமிழ்ச்
சிங்கம் நடந்தவழிச் சித்தாந்தம் "

என்றும்,

" எங்கும்இறை தோய்ந்தாலும் தோய்விலன்என்(று) ஓதுதமிழ்ச்
சிங்கம் நடந்தவழிச் சித்தாந்தம் "

என்றும் கூறியமை காண்க.

தமிழ்ப்புலவர் எல்லோருக்கும் சிங்கம் :

ஒரு சமயம் மதுரைக் கடைச்சங்கத்திருந்த நாற்பத்தொன்பது புலவர்களும் தாம்தாம் இயற்றிய பாடல்கள் இன்ன என்று அறியாமல் மயங்கிக் கிடந்தனர். அப்பொழுது அவர்கள் யாவரும் மதுரைச் சொக்கலிங்கப் பெருமானிடம் சென்று தம்முடைய கலக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். சொக்க

லிங்கப் பெருமானும் ஒரு தமிழ்ப் புலவராக வந்து அவர்கள் பாடிய பாடல்களை எல்லாம் கொணரச்செய்து அவரவர் பாடிய பாடல்களை அவரவர்களுக்குப் பிரித்துக்கொடுத்தார். இவ் வரலாறு திருவிளையாடற் புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. இங்ஙனம் சங்கத்தாருடைய பாடல்களை எல்லாம் அறிந்து கூறியதாலே சொக்கலிங்கப்பெருமானை, வெள்ளியம்பலவாண முனிவர், தமிழ்ப் புலவர் எல்லோர்க்கும் சிங்கம் என்று பின்வரும் பாடலில் கூறியுள்ளார் :-

" சங்கத்தார் வாக்கும் தமிழுணர்த லால்சொக்க
லிங்கம் தமிழ்ப்புலவர் எல்லோர்க்கும் — சிங்கமன்றோ ?
கற்றருட் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். "

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswareswami Devasthanam, Tirucadayur

I had the good fortune of visiting this famous temple once again, my first visit being in 1941 when my father-in-law the late Mr. Chockalingam Chettiar celeberated his both birthday and now I have come to attend his son's both birthday. It is always a pleasure to visit this temple, so well kept, clean and very orderly, The priests who are here are a lesson to other temples for their simplicity and quitness, also one should admire their earnestness in the temple. The officials connected with this temple are keen Bhaktas, and are very devoted to the administration of the temple. I have every confidence that they, the officials and the priests would devote their best to the temple. We, citizen of India, should be proud of those who preserve such great monuments and places of worship.

(Sd.) M. A. Chidambaram,
11—2—66. Adayar House Madras.

அப்பர் வாக்கில் அம்மை

செஞ்சொற்கொண்டல்
விந்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ.
மொழியியல்துறை, அண்ணாமலைப்பல்கலைக் கழகம்

'அவன் செயல்'

இறைவனுடைய திருவருளில் நம்பிக்கை வைத்து அதன்வழி இயங்கியவர்கள் நம்நாட்டு அநுபவ ஞானியர், உலகெங்கணும் உள்ள அநுபவ ஞானியர்க்கும் இது பொருந்தும்; இத்தகைய அருளனுபவம் வாய்ந்த சான்றோரே ஆங்கிலத்தில் 'Mystics என்று அழைக்கப்பெறுவர்- இச்சான்றோர்கள் தம் செயல் என்று ஒன்று தனித்தின்றி எல்லாம் அவனுக - இறையாகக் கண்டு வாழ்பவர்கள்; 'நின்செயலே என்று நான் உணர்ந்ததும் நின்னருளாலேயே ஆம்; அவ்வாறு உணர்ந்ததால் என்செயலை எங்கும் என்றும் கண்டிலேன்' என்று சிவஞானச்சித்தர் பெருந் தகையாராக விளங்கிய குருஞானசம்பந்தப்பெருமானுர் சிவபோக சாரத்தில் பாடும் பகுதி இவ்விளக்கமே.[1] சமயப் பெருந்தலைவர் களாகிய நால்வர் பெருமக்கள் இவ்வாறு வாழ்ந்து வழிகாட்டிய வர்களே.

உள்ளக்காட்சி :

சைவ சித்தாந்த தரிசனம் - அல்லது செந்நெறி இத்தகைய அருளனுபவக் கருவூலமாக உள்ளது எனல் மிகையன்று. தரிசனம் என்ற சொல் 'காண்டல்' எனும் வினையடியாக வரும் சொல். (1) புலனுணர்வாற் காணுதல், (2) அறிவாற்காணுதல், (3) உள்ளனுபவ உணர்வான் அநுபவித்துக் காணுதல் என்று இதனை விளக்கலாம், இது ஆன்மிகக் காட்சி ஆகும். இத்தகைய தத்துவக் காட்சிகளின் தொகுப்பே சைவசித்தாந்தக் காட்சி

---

[1] சிவபோகசாரம் :-

" நின்செயலாலேயென்று நினதருளாலே யுணரின்
என்செயலே காண்கிலேனே "

என்று டாக்டர், திரு. இராதாகிருட்டினன் அவர்கள் கூறுவதை யொட்டி முடிவுகோடல் தவருகாது.[1]

சிவபக்திக்காட்சி :

தவப்பெருந்தகையாராக விளங்கிய அப்பரடிகள் கண்ட திருக்காட்சியை இங்கு எண்ணலாம். இவ்வருட் செல்வர் தம் உள்ளத்தே சிவபிரானை முழுமுதற் பொருளாகக் கண்டதுடன், கண்களாலும் காணும் பேறு பெற்றவர்கள். உலகப்பெருஞ் சமய மேம்பாடாக விளங்கும் அம்மையப்பர் வடிவில் இறை நிலையனுபவம் எய்தியவர்கள். புற வரலாற்ருன் விளங்குவதை விட, அகச்சான்றுகளான் விளங்கும் அகவரலாற்ருல் உணர்வதே சிறப்பு. அடிகள் திருவாக்கின் பல பகுதிகள் இவ்வருட்காட்சியை விளக்குவன. 'அவனருளே கண்ணுகக் காணு' கின்ற அடிகள்[2], இறைவனையே உலக முழுதும் காண்கின்ருர்கள். 'தானலாதுலகம் இல்லை; சகமலாது அடிமை இல்லை[3] பெருமானுக்கு' என்பது அடிகள் முடிவு. திருவையாற்றுத் திருநேரிசை (4-40) இம்முடிவைப் பலநிலை களில் எடுத்துக் காட்டுகின்றது.

'வார்குழல் மங்கையோடும் ஆனலாது ஊர்வதில்லை'[4]
'சுரிபுரி குழலியோடும் துணையலால் இருக்கையில்லை'[5]
'அரியலால் தேவியில்லை'[6]
'உமையலாது உருவம் இல்லை'[7]

என்பன இப்பதிகத்து அம்மை பற்றிய அடிகள் வரிகள். 'மாதர்ப்பிறைக் கண்ணியானை' எனும் பதிகமுழுவதும், உலகக் காட்சியில் அடிகள் கண்ட சிவசக்திச் செழுங்காட்சியையே

---

[1] "The term 'dharsana' comes from the word 'dr.s' 'to see'. This seeing may be either perceptual observation of conceptual Knowledge of intuitional experience. It may be inspection of facts, logical inguiry or in right of soul, Generally 'dhansanas' mean critical expositions logical :surveys or systems.........It shows that 'dharsana' is not an intution, however much it may by allied to it."

—Dr S. Radhakrishnan-"Indian Philosophy"-P. 43.

[2] அப்பர் 3045. [3] 394. [4] 394. [5] 396. [6] 398. [7] 402'

எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு அம்மையோடு அப்பனுகி விளங்கும் இறைவன் தொண்டர் உள்ளமே கோயிலாக் கொள்வான் என்று முடிக்கின்ருர் அருட் கவிஞர்.

'உமையலாது உருவம் இல்லை'

இவ்விடத்து, அடியார் இயல்பை விளக்கும் வரிகள் சிந்தனைக்குரியவை. 'நாள்மலர்களைக் கொய்து, கொய்து இறைவன் திருவடிகளுக்குத் தொழுது தூவ வேண்டும். அவ்வாறு கொய்து கொண்டே இருப்பதனுல் கைந்நகங்கள் தேய்தல் வேண்டும். அவ்வாறு நகமெல்லாம் தேயப் பெற்ற அடியவர் கண்ணீர் பெருக்குவர். கண்களிற் பெருகி முக மெலாம் மல்கும் அவ்வன்புக் கண்ணீர் உடைய அகம் அல்லது வேறு கோயில் இல்லை ஐயனுக்கு * என்கிறது அருட்கவி.

'உமையலாது உருவம் இல்லை' என்பது அடிகள் முடிவு ஆதலின், அருட்பாடல் அமைப்பில் அம்மையையும் இணைத்துப் போற்றுதல் இவ்வருளாளர்க்கு இயல்பாயுள்ளமை காணலாம். அவற்றை ஒருங்கு தொகுத்துக் காண்டல் அடிகளது தத்துவ நெறியில் மெய்ம்மை காட்டும் ஆதலின் அவற்றைச் சிந்தித்தல் இன்றியமையாதது ஆம்.

அன்னையின் திருப்பெயர்கள் :

உமை,[1] உமையாள்,[2] உமையவள்,[3] உமைநங்கை,[4] காமக் கோட்டி,[5] மனோன்மணி,[6] பார்ப்பதி[7] என்ற சிறப்புப் பெயர்களைக்

* "சகமலாதடிமையில்லை தானலால் துணையுமில்லை
நகமெலாந் தேயக் கையால் நாண்மலர் தொழுதுதூவி
முகமெலாங் கண்ணீர் மல்க முன்பணிந்தேத்தும் தொண்டர்
அகமலாற் கோயில் இல்லை ஐயனையாறனார்க்கே" 401.

[1] அப்பர்: *63, 76, 102, 315, 381, 402, 448, 484, 492, 699, 712, 850, 968, 1123, 1146, 1160, 1163, 1251, 1294, 1417, 1439, 1459, 1492, 1493, 1530, 1538, 1541, 1559 1561, 1567, 1632, 1636, 1851, 1868, 1885, 1930, 2060, 2122, 2133, 2278, 2438, 2451, 2476, 2519, 2624, 2643, 2700, 2747, 2839, 2876, 2883, 2912, 2920* etc.

[2] ,, *314, 456, 836, 936, 937, 1237, 1471, 1563, 2126, 2164, 2233, 2239, 2339, 2511, 2664, 2716, 2736, 2740, 2845, 2907, 2948, 2956, 2959, 2962* etc.

[3] ,, *253, 609, 753, 952, 2929* etc.

[4] ,, *1000 - 3.*

[5] ,, *2127.* [6] *1964.* [7] *973.*

கூறிப் போற்றும் இடங்கள் பலஆகும். பெண்டிர்க்குரிய பொதுப் பெயர்களாற் சுட்டிப் பேசும் இடங்களும் எண்ணில: அணங்கு,[8] ஏந்திழை,[9] ஏழை,[10], மாது,[11] செல்வி,[12] காரிகை,[13] சேயிழை,[14] தெரிவை.[15] தையல்,[16] நங்கை,[17] நல்லாள்.[18] பேதை,[19] மடவாள்,[20] மெல்லியல்[21] என்பன முதலியன அப்பெயர்கள். இனி உருவக வகையால் அம்மையைத் தோகை (மயில்) என்றும்,[22] 'பாவை என்றும்[23] ' பைங்கொடி'[24] 'கொம்பனாள்' என்றும்[25] அடிகள் அகம் உருகிப் போற்றலும் காண்கின்றோம். புராண வரலாறு களை யொட்டி, மலையரசன் மகள் என்று அம்மையைப் போற்று தலும், தவச்சிறப்பை உரைத்தலும் அடிகள் இயல்புகள்.

'கடம்பனைப் பெற்றவள்:'

இனி, திருமால் தேவியாரின் அம்சம் என்று கூறப்படுதலை யொட்டி அடிகள் பாடும் பாடற்பகுதிகளும் உள்ளன. 'முருகப் பெருமானின் அன்னை' என்று பிள்ளையொடு சார்த்திப் பிராட்டியை வழிபடுவதும் இந்தப் பேரருட்புலவர் பிரானார் பாட்டியல்பாகும்.[26]

அன்னையின் அச்சம்:

உலகெலாம் ஈன்றளிக்கும் அன்னையின் அச்சத்தை நம் அருட்கவிஞர் படம் பிடித்தது போன்று பாடும் பகுதிகள் இலக்கியச் சிறப்பு உடையவையாயுள்ளன. யானையை உரித்துப் போர்த்தபோதும், புலியதள் கண்டபோதும், இராவணன் மலையை அசைத்த போதும் அன்னையார் அஞ்சிய அச்சத்தைக் கவிதைக் கண்ணுற்றகண்டு அழகுறப்பாடும் சில அருட்பாடல் களையும்[27] காண்கின்றோம்.

வனப்பினை வரைதல்:

அன்னை பராசக்தியைப் பற்றிய வருணனைப் பகுதிகளில் பெரும்பங்குபெறுபவை கண்ணும், கூந்தலும் ஆகிய இரண்டே

---

[8] 484. [9] 23, 25, 462, 464, 2211. [10] 95, 694. [11] 1008 1595, 1672, 1733, 2076, 2608, 2696. [12] 431, 1027. [13] 1246, 1351. [14] 465. [15] 2921, 2926. [16] 26, 1158, 1360, 1702, 1849. [17] 76, 1411. [18] 809, 2219. [19] 277, 1814, 2980, [20] 141, 1811, 2216, 2272, 2542, 2682, 2697, 2834, 3064, 3065. [21] 2760, 2761, 2857. [22] 1525. [23] 900. [24] 2634 [25] 2964. [26] 1262.

[27] அப்பர் 314, 712, 2519, 309, 277, 638, 2542.

என்று கூறலாம். அம்மையின் திருக்கண்ணோக்கம் இவ்வருளாளர்க்குப் பேரருள் விளக்கியது என்று கொள்ளுமாறு இவை அமைந்துள்ளன. கூந்தலுக்கு அடுத்து அடிகளுடைய அருட் கவிதையில் பெரும்பங்கு பெறுவன மொழிபற்றிய வருணனைகள் என மொழியலாம். கரும்பு[1], கிளிமழலை[2], குயில்[3], தேன்[4], பால்[5], பண்[6], யாழ்[7], ஆகிய இனிமையெல்லாம் அம்மையின் சொல்லுக்கு அடிகள் தரும் உவமைகள். 'பண்' போன்ற இன்மொழி யென்று பாடும் அடிகள், அம்மையின் வாய்மொழி அதனினும் மிக்கதாதலை அநுபவத்தாற் கேட்டுணரும் நெஞ்சினராய், 'பண்தனை வென்ற இன்சொல்' என்று பாடியருளுதலையும் காண்கின்றோம்.[8] இசை வல்ல இயல்பினராதலின், 'பண்' இங்கே மொழியினிமைக்கு உவமையாகிறது. வண்டுகளின் பாட்டிசையைக் 'காமரம்' 'பஞ்சமம்' 'செவ்வழி' முதலிய பண்கள் அகப்புலனாற் கேட்டின்புறும் அருட்கவிஞர் அன்றோ அடிகள்.[9]

அம்மையின் ஆடல் :

இறைவனுடைய திருநடனத்தை அடிகள் பாடும் பாடற் பகுதிகள் அருளியல் தெரிக்கும் அருமை உடையவை. அரனாரின் அருளாடலில் அம்மையின் பங்கும் சீரியது. அம்மை காண அப்பன் ஆடும் காட்சியும், அம்மைபாட ஐயன் அதற்கிசைய ஆடும் பொற்பும், அம்மையும் தானும் ஒருங்கிணைந்து ஆடல் நிகழ்த்தும் அழகும் தீந்தமிழ்ப்பாட்டோவியங்களாக[10] அடிகள் திருவாக்கில் நின்று ஒளி வழங்குகின்றன.

அம்மையப்பர் அருளெழில் :

அம்மையை ஒரு பாகத்துக் கொண்டு எழுந்தருளிய இறைவன் திருவுருவை அடிகள் தம்முள்ளத்தே கண்டு அப் பேரருட்டோற்றத்தை எழுதிக் காட்டுகின்றார்; "ஒரு காதில் பொன்னோலையும், ஒரு காதில் சங்கக் குழையும் பூண்டு, வேத கீதங்கள் முழங்க, ஒருபுறம் கட்டிய சடையும் ஒரு புறம் பின்னிய

---

[1] *2599, 2091, 1351.* [2] *63.*
[3] *,, 2625.* [4] *2569, 2468.*
[5] *187, 1650, 2484.* [6] *1127, 1163, 2610.*
[7] *"யாழின்மொழியவள்" — ,, 19.*
[8] *610.*
[9] *614, 2154.*
[10] *2625, 1261, 231.*

-குழலும் ஆக வருவார் அம்மையப்பர்; இது இவருடைய இயல்பு என்பேனே? அல்லது இவர் வண்ணம் என்பேனே? அல்லது என்றும் காண்டற்கரிய அருள் எழில் வண்ணம் என்றுரைப்பேனே?'' என்று பியந்தைக் காந்தாரத்தில் அமைந்த 'சிவன் எனும் ஓசை' எனும் பதிகத்தின் இறுதிப் பாடலில் அடிகள் பாடுகின்றார். 'வண்ணம்' எனும் சொல்லை 'வண்ண-வண்ணம்' என்ற ஓர் அழகிய புது வடிவத்தில் ஐந்து முறை அமைத்து இருபாடல்களை இப்பதிகத்தில் அருளியுள்ளார் அடிகள். இந்நயம் மேலும் ஆழ்ந்து இன்புறத்தக்கதாகும். சிவன் என்னும் ஓசையைத்தவிர வேறு உலகில், திருநின்ற செம்மை உளதோ' என்று வினவுவதும், இதனாலும், சுந்தர மூர்த்தியாரால் எடுத்துப் போற்றப்பெறுவதுமாகிய இப் பதி கத்தின் இறுதிப் பாடலாக இது அமைவது பெருஞ்சிறப்புடைய தாகும்.[1] 'செம்மை' பரம்பொருளாம் சிவம் ஆகவும், அதனுள் நின்ற 'திரு' அம்மையாகவும் கொண்டால் 'திருநின்ற செம்மை என்ற தெய்வச் சொற்றொடரின் திறம் தெளிந்தவர் ஆவோம்.

சக்தியும் சிவமும்; சாத்திர நுட்பம் :

சிவத்தினின்று சக்தி தோன்றுவதும், சக்தியினின்று சிவம் தோன்றுவதுமாகிய அருள்நிலைகளும் அப்பரடிகள் அருள் வாக்கில் அமைந்துள்ளன. 'மலைமகள் தன்னுடைய பாலனை'[2] 'மனோன்மணியைப் பெற்ற தாயிலானை'[3] என்ற இருபகுதிகள் இதனை விளக்குவன ஆம். முன்னதற்குப் 'பால்' - பக்கம் எனும் பொருள் பொருந்திடினும், பின்னது சக்தியைச் சிவம் ஈன்ற தன்மையையே சுட்டுவது எனலாம்.

"வரும்சத்தி ஒருத்தியாகும்; எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்'' என்றும்[4], 'சிவம் சக்திதன்னை யீன்றும் சக்திதான் சிவத்தை யீன்றும், உவந்திருவரும் புணர்ந் திங் குலகுயிரெல்லாம் ஈன்றும், பவன் பிரமசாரி ஆகும் பால் மொழி கன்னியாகும் ; தவந்தரு ஞானத்தோர்க்கு இத்தன்மை தான் தெரியுமன்றே'[5] என்றும் அருணந்தி சிவாசாரியார் பாடும்பகுதி இங்கு ஒப்பிட்டுணர்தற்குரியது ஆகும். 'உமையலா துருவம் இல்லை' என்ற அடிகள் திருவாக்கின் கருத்து நுட்பங் களாக இவையனைத்தையும் கொண்டு நோக்குதல் தக்கது ஆகும்.

....

[1] அப்பர் - 81. [2] அப்பர் - 843. [3] அப்பர் -1964.
[4], [5] சிவஞானசித்தியார் - சுபக்கம் - 76, 77.

தருமை ஆதீன மடாலய தேவாலயங்களின் சார்பில்
சென்னைப் பேட்டைகளில் சமயப்பிரசாரம்

மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வரர் ஆலயத்தில்
ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள்
தொடங்கிவைத்தார்கள்.

திருமை ஆதீன மடாலய தேவாலயங்களின் சார்பில்
சென்னைப் பேட்டைகளில் சமயப்பிரசாரம்

மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வரர் ஆலயத்தில்
ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றி நவிலல்

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீஸ்வரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

சித்த வைத்திய ஆராய்ச்சி

சென்ற இதழில் ஔவைக் கற்பம் என்ற கட்டுரையை வழங்கினோம். அதில் கற்பம் உண்பதால் ஏற்படும் பயன் என்ன? எவ்வளவு காலம் சாப்பிட வேண்டும் என்பனவற்றையும் வழங்கினோம்.

இனி கற்பத்தில் சிறந்ததாகிய கடுக்காய் கற்பத்தைப் பற்றி ஆராய்வோம்.

" காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் " என்பது பழமொழி.

கடுக்காய் கற்பம் உண்பதால் பழமலங்கள் வெளிப்படும். இரைப்பை பலப்படும், தேகம் பலமடையும் பாண்டு ரோகம், மகோதரம், காமாலை மயக்கம், இருமல், முதலிய கொடிய நோய்கள் வராமல் தடுக்கலாம்.

கடுக்காயில் ஏழு வகைகள் உண்டு. 1. சுரக்காய் போன்ற உருவமும், 2. உருண்டையான உருவமும், 3. நான்கு கோணங்களுள்ளதும் (தோல் மெல்லியதாயும்.) 4. ஐந்து கோணங்களுள்ளதும், 5. அதிக சதைப்பிடிப்புள்ளதும் 6. தங்கம் போன்ற நிறமுள்ளதும் 7. கரு நிறமுள்ளதுமாக உள்ள அடையாளங்களைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

இவற்றுள் தண்ணீரில் அமிழ்வதும் நல்ல கனமுள்ளதும், மழுமழுப்பானதும் அரைப்பல எடைக்குக் குறையாததும் தங்கம் போன்ற நிறமுடையதும் உயர்ந்த ரகமாகக் கருதப் படுகிறது.

பருமனான மஞ்சட் கடுக்காய் நூறு எடுத்து உடைத்து, உள்விதைகளை நீக்கி, ஒரு வாயகன்ற ஜாடியில் போட்டு ஒன்றிரண்டு படி தண்ணீர் விட்டு, ஊறவைத்து, தண்ணீரில் கடுக்காயின் நிறம் வந்த பின் பிசைந்து வடிகட்டிக் கொள்ளவும், வடிகட்டிய தண்ணீரை ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு. தூசி, மண் விழாமல் மெல்லிய துணியினால் வேடு கட்டி வெய்யிலில் வைத்து நாள்தோறும் கலக்கி விடவும். அது

குழம்பாகி உலர்ந்து கரிய போனத்தைப் போலாகும். பிறகு நன்றாக இடித்து வஸ்திரகாயம் செய்து எட்டுக்கு ஒன்றாக சுக்கு வெல்லம், இந்துப்பு கலந்து கடுக்காய் ஒரு வருடம் சாப்பிட்டால் எந்த வியாதியும் அணுகாது. பன்னிரண்டு வருடங்கள் நரை திரையின்றி வாழலாம்.

(வேறு) :நன்றாய் முற்றின கடுக்காயை ஒரு ஜாடியில் போட்டு கடுக்காய் மூழ்கும் வரை தேன் விட்டு பூமியில் மூன்றடி ஆழமான குழியில் 3 மாதம் புதைத்து வைத்துப் பிறகு எடுத்து தினம் ஒரு கடுக்காய் வீதம் மென்று தின்று வந்தால் முன் கூறிய பலனுண்டு.

இம்மாதம் நம் வைத்தியசாலைக்கு வந்து மருந்து சிகிச்சை பெற்றவர்கள் விபரம்,-

1.	ஆண்கள்	896
2.	பெண்கள்	915
3.	குழந்தைகள்	617 (12 வயதுக்குட்பட்டவர்கள்)

பார்வையாளர் குறிப்பு

என்னுடைய தந்தை பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தங்கை மலர்க்கொடி, சிதம்பரம் என். தண்டபாணிப் பிள்ளை ஆகியோருடன் எங்கள் குலதெய்வத்தைத் தரிசிக்க வந்தபோது இங்குள்ள சித்த வைத்தியசாலையைப் பார்க்க வந்தேன். இங்குள்ள சித்த வைத்தியர் திரு. க. இராமகிருஷ்ண பிள்ளை அன்போடு இங்கு நடப்பனவற்றை அறிவித்தார்கள். நான் வந்தபோது ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மருந்து வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

இங்குள்ள சித்த வைத்தியர் சொன்ன அபிவிருத்திக்கான யோசனைகள் வரவேற்கத்தக்கவையாய் இருந்தன. சித்த வைத்தியத்தை வளர்த்து பயன்படுத்துவதற்கு அரசினரால் முடியாமல் இருக்கின்ற இந்நாட்களில் இம்மாதிரி நிலையங்கள் விருத்தியாகி நல்ல முறையில் நடந்தால் இவைகளைப் பின்பற்றி யாவது அரசாங்கம் நல்ல சித்த வைத்தியசாலைகளை நடத்துவதற்கு யோசனைப் புலப்படும்.

வைத்தியர் இராமகிருஷ்ணப் பிள்ளை புற்று நோய்க்கு மருத்துவம் செய்து குணம் அடைந்த சான்றிதழ் காட்டினர். இதை நவீன மருத்துவர்கள் கவனிக்க வேண்டும். மேலும் சிறிய குச்சு போன்ற மூலிகையைக் காட்டினர். தண்ணீர் பட்டவுடன் அதன் அசைவு ஆச்சரியமாக இருந்தது.

நாம் தெரிந்து கொள்ளவேண்டியதும், செய்ய வேண்டியதும் அநேகமிருக்கின்றன. முயற்சியில் ஈடுபடவேண்டுமெனும் சங்கல்பம் ஏற்படவேண்டும்.

(ஒ ம்) ஆனந்தகுமார், ஜி. சி. ஐ. எம்.
செயலாளர், தென்னிந்திய சித்தவைத்திய சங்கம்
10, ராகவையா வீதி, மதருஸ் 17.
(ஒ·ம்) சிதம்பரம் என். தண்டபாணிப்பிள்ளை
இந்தியன் மெடிகல்போர்டு வைஸ்பிரசிடெண்டு
மதருஸ் 10

1966 பிப்ரவரி மாதம் நோய் குணமானவர்கள் எழுதிய நற்சாட்சிப் பத்திரம் ஒன்று இதனடியில் தரப்பட்டிருக்கிறது.

I was suffering from obstructive jaundice for the last one month. First I took treatment in Mayuram with Dr Venkatarajalu for 15 days. There was no improvement and the disease have become serious. I have lost faith in Alopathic medicine and by chance I met the Siddha Vaithiasali doctor K. Ramakrishnan. He gave me a good treatment and I am now completely cured. I am very much thankful to the Doctor who have saved my life from the cromic stage.

I pray Lord Muthukumaraswamy to give long life to the Doctor for saving the poor people like me.

(Sd) K. Sampath Iyangar,
Sri Sivaloganatha Swamy Temple
3-2-66 Tiruppangur.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswami Devasthanam, Tirucadaiyur.

திருக்கடையூர் கோவில் வந்து எங்கள் 60ம் ஆண்டு பூர்த்தி நிகழ்ச்சி சுவாமி அம்பாள் தரிசனம் எல்லாம் மிகமிகத்திருப்தியாக நடைபெற்றதுபற்றி மிக்க மகிழ்ச்சியடைந்தோம். அதுசமயம் கோவில் சம்பந்தப்பட்ட அனைவரும் மிக்க மகிழ்ச்சியோடு சௌகரியம் செய்து கொடுத்தது மறக்கற்பாலதன்று; எல்லாம் ஆண்டவன் செயல்.

(ஒ-ம்.) நீலாவதி - ராமசுப்பிரமணியம்
9/2வது குறுக்கு வீதி
25—2—66. இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28.

செய்திகள்

தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி மாயூரம்

சைவசித்தாந்த வகுப்புத் தேர்வு பரிசளிப்பு விழா

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில் நான்காண்டுகள் சைவசித்தாந்த நூல்களை முறையே கற்று முதல் தகுதிகளில் தேர்ந்த மாணவர் இருவர்க்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் 75 வெண்பொற்காசுகளை முதல் இரண்டாம் பரிசுகளாக வழங்கியருளத் திருவுளம்பாலித்தார்கள்.

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சைவசித்தாந்தத்தின் நுண்கருத்துக்களைத் தெளிவோடு மாணவர்கள் கற்று வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கி நிறைநிலை வகுப்பில் முதற் பரிசுபெற்ற சி. சுகேசன், இரண்டாம் பரிசுபெற்ற இரா. சந்திரசேகரன் ஆகியோர்க்குப் பரிசுகளை வழங்கியருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சமயநூற் கருத்துக்கள் பலவற்றிலும் ஏற்படும் ஐயங்களை மாணவர்களைக் கேட்கச்செய்து அவற்றிற்குத் தெளிவான விடைகளை அருளினார்கள்.

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலயம் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இப்பரிசு திட்டத்தை விளக்கி சமய நூல்களை மாணவர்கள் ஏற்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்கள்.

கல்லூரிப் பொறுப்பு முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் வரவேற்புரை கூறினார். சைவசித்தாந்தப் பேராசிரியர் வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் நன்றியுரைகூற, விழா இனிதே நிறைவெய்தியது.

திருக்குவளை தேவஸ்தானத்தில்:

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்குவளை என்னும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வண்டமரும்பூங்குழலாள் சமேத ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி நெல் மகோற்சவம் 4—3—66 வெள்ளிக்கிழமை 7—3—66 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது.

சுற்றுப்புற ஊர்களிலிருந்து பல அன்பர்கள் வந்து வழிபட்டு உய்ந்தனர். விழாவையொட்டி, தேவார பாராயணமும், சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. சொற்பொழிவுகள் பிரசங்க சபா மண்டபத்தில் நாள்தோறும் மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றன.

5—3—66 சனிக்கிழமையன்று வித்துவான் திரு. ச. சேது சுப்பிரமணிய பிள்ளை (தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்பள்ளி சிதம்பரம்.) "சுந்தரர்" என்ற தலைப்பிலும், 6—3—66 ஞாயிற்றுக் கிழமையன்று தருமையாதீனப் புலவர், வித்துவான் திரு. வை. மு. சண்முக தேசிகர் (தமிழாசிரியர், தேசீய உயர்பள்ளி நாகப்பட்டினம்.) "குண்டையூர் கிழார்" என்ற தலைப்பிலும், 7—3—66 திங்கட்கிழமையன்று வித்துவான் திரு. மு. இரத்தின தேசிகர் (தலைமைத் தமிழாசிரியர், உயர்பள்ளி, திருவாரூர்) "ஆரூரர்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையச் சார்பில்

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தல யாத்திரை

23—12—65ல் கடம்பர்கோயில். திருவாட்போக்கி, சிவாயமலை சிவாயம்கோயில், ஈங்கோய்மலை, திருப்பராய்த்துறை ஆகிய தலங்களில் வழிபாடும், சமயப் பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. கடம்பர்கோயில் திருவாசக அன்பர் திரு. வைத்தியலிங்க முதலியார், நிர்வாக அதிகாரி திரு. பழநி, திரு. மகாதேவன், அப்பர் உழவாரப்படைத் தொண்டர்கள் ஆகியோர் வரவேற்று, வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் நடத்தி வைத்தனர். திரு. வைத்தியலிங்க முதலியார் குழுவினருக்குக்

காலே சிற்றுண்டியும். மதியம் மாகேஸ்வர பூசையும் செய்து உபசரித்தார்கள். திருவாட்போக்கியில் நிர்வாக அதிகாரி திரு. எஸ். அரங்கசாமி பிள்ளை, அறங்காவலர்கள் முதலியோர் பூர்ண கும்பங்கொடுத்து வரவேற்று வழிபாடு செய்துவைத்து, பானகம், மோர் முதலியன தக்க சமயத்துக்கு உதவி மலையேறும் களைப்பு நீக்கி உபசரித்தார்கள். ஈங்கோய்மலையில் நிர்வாக அதிகாரி. திரு.[போஜராஜன், சிவாசாரியர் ஆகியோர் வரவேற்று உபசரித்தார்கள். திருப்பராய்த்துறையில் பேஷ்கார், சிவாசாரியார் முதலியோர் வரவேற்று வழிபாடு செய்து வைத்தார்கள்.

24—12—65ல் திருஎறும்பியூர், திருநெடுங்களம், திருக்காட்டுப்பள்ளி, திருக்கானூர் திருஆலம்பொழில், திருப்பூந்துருத்தி, திருவையாறு ஆகிய தலங்களில் வழிபாடும், சமயப் பிரசாரமும் நடைபெற்றன. முதலிரு தலங்களிலும் மேற்படி ஆலயங்களில் நிர்வாக அதிகாரி திரு. விநாயகமூர்த்தி அவர்களும் சிவாசாரியர்களும் வரவேற்று வழிபாட்டை நன்கு நடத்தி வைத்தனர். திருக்காட்டுப்பள்ளியில் நிர்வாக அதிகாரி திரு. என். பன்னீர்ச்செல்வம், திருப்பணிக் கமிட்டித் தலைவர் திரு. பி. எஸ். இராஜகோபால ஐயர், அறநிலைய இலாகா ஆய்வாளர் திரு. வைத்தியநாதன் முதலியோர் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் நிகழ்த்தி வைத்தனர். இராஜகோபுரத் திருப்பணிக்கு வழிபாட்டுக் குழுவினர் ரூ. 101—00 நன்கொடை வழங்கினர். திருப்பணிக் கமிட்டியார் குழுவினருக்கு மாகேஸ்வர பூசை செய்து உபசரித்தனர். திருக்கானூரில் நிர்வாக தர்மகர்த்தர் திரு. நடராஜ ஐயர், நிர்வாக அதிகாரி திரு. குருமூர்த்தி, விஷ்ணுபேட்டைப் பெருமக்கள் ஆகியோர் வரவேற்று வழிபாட்டை நன்கு நடத்திவைத்துக் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள். திரு. ஆலம்பொழில் ஆலயத்தில் நிர்வாக தர்மகர்த்தர் திரு. ஆர். பஞ்சாபகேசம் பிள்ளை ஊர்ப் பொதுமக்கள் ஆகியோர் ஆர்வத்துடன் வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்தி வைத்தனர். திருப்பூந்துருத்தியில் நிர்வாக அதிகாரி திரு. பி. சேதுராமன், அறங்காவலர்களான திரு. ஏ. சாம்பசிவம், திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி முதலியோர் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் சிறப்புற நடத்தி வைத்தார்கள். அப்பர் சுவாமிகள் சிலகாலம் தங்கியிருந்த சிறப்புடை அப்பர் சுவாமிகள் மடத்தில் சமயப் பிரசாரம் நடைபெற்றது. திருவையாற்றில் கட்டளை விசாரணை விசுவலிங்கத் தம்பிரான் சுவாமிகளும், ஸ்ரீ ஐயாறப்பர் வாரவழிபாட்டுக் கழகத்தினரும் குழுவினரை வரவேற்று வழிபாட்டை நன்கு

நடத்திவைத்து, இரவு சிற்றுண்டியும், மறுநாட்காலை சிற்றுண்டியும் திருவையாறு கட்டளை மடத்தில் அளித்து உபசரித்தனர்.

25—12—65 கண்டியூர், தஞ்சைப் பெரியகோயில், தென்குடித்திட்டை, திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருப்புள்ளமங்கை, சக்கரப்பள்ளி, ஆகிய தலங்களில் வழிபாடும், பிரசாரமும் நடைபெற்றன. திருக்கண்டியூரில் நிர்வாக அதிகாரி, திரு. ஆர். ஜெயச்சந்திரன், சிவாசாரியர், ஊர்ப்பொதுமக்கள், அறங்காவலர் முதலியோர் குழுவினரை பூர்ணகும்பத்துடன் வரவேற்று வழிபாட்டை நன்கு நடத்தி வைத்தார்கள். தஞ்சைப் பெரிய கோயிலில் நிர்வாக அதிகாரி, திரு. என். சீனிவாசன் அவர்கள் குழுவினரை மாலையிட்டு வரவேற்று ஐதிகம், சிற்பச் சிறப்பு முதலியவற்றை விளக்கி வழிபாடு செய்து வைத்தார்கள்.

தென்குடித் திட்டையில் நிர்வாக தர்மகர்த்தர் திரு. இராமு பிள்ளை, சிவாசாரியர் ஆகியோர் வரவேற்று வழிபாட்டை நன்ருக நடத்திக் கொடுத்தனர். திருச்சோற்றுத்துறையில் நிர்வாக அதிகாரி, திரு. பி. சேதுராமன், சிவாசாரியர், ஊர்ப்பொதுமக்கள், அறங்காவலர்கள் ஆகியோர் வழிபாட்டை நன்கு நடத்திவைத்து, குழுவினருக்கு மாகேஸ்வர பூசையும் செய்து உபசரித்தார்கள். தஞ்சை அறநிலையத்துறைத் துணை ஆணையர் திரு. ஏ. மார்க்கண்டவேல்ராஜன் அவர்களும் இவ்வாலய வழிபாட்டில் கலந்துகொண்டு உபசரித்தார்கள்.

திருவேதிகுடியில், நிர்வாக அறங்காவலர், திரு. ஸ்ரீநிவாசன் அவர்கள் சார்பில் திரு. இராஜமாணிக்கம் பிள்ளை, ஊர்ப்பொதுமக்கள் முதலியோர் வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர். திருப்புள்ளமங்கையில் நிர்வாக தர்மகர்த்தா, திரு. ஏ. முருகானந்தம்பிள்ளை, நிர்வாகஅதிகாரி, திரு. சீனிவாச அய்யர், ஊர்ப்பொதுமக்கள் ஆகியோர் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்புற நடத்தி வைத்துச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள். சக்கரப்பள்ளியில் நிர்வாக தர்மகர்த்தர், சீனிவாச நாயக்கர் அவர்கள், அறங்காவலர் திரு. கோபாலசாமி, ஹிந்து நிருபர், மாலைமுரசு நிருபர், பக்கத்தூர்ப் பெருமக்கள் முதலியோர் உற்சாகத்துடன் வரவேற்று வழிபாட்டையும், சமய பிரசாரத்தையும் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். இன்று திருவேதிகுடிக்கு அருகில் குழுவினரின் பஸ் சாலையைவிட்டுச் சற்றுக் கீழிறங்கியதால் தாமதம் ஏற்பட்டது. அதனுல் பாபநாசம்செல்ல இயலவில்லை. பாபநாசம் 108 சிவாலயத்தில் தொண்டர்

திரு. கோ. சிவஞானம், அறநிலையத்துறைத் துணை ஆணையர் திரு. ஏ. மார்க்கண்டவேல்ராஜன், நிர்வாக அதிகாரி திரு. நடராஜன் முதலியோர் 108 திருவிளக்கு பூசை நிகழ்த்தினர்கள்.

26—12—65ல் பாபநாசம் 108 சிவாலயம், திருநல்லூர், (திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள கோயில்) திருக்கருகாவூர், திருப்பாலைத்துறை, ஆவூர்ப் பசுபதீச்சுரம், திருப்பட்டீச்சுரம் ஆகிய தலங்களில் வழிபாடும், சமயப் பிரசாரமும் நடைபெற்றன. பாபநாசத்தில் நிர்வாக அதிகாரி, திரு. நடராஜன், தொண்டர் திரு. கோ. சிவஞானம் முதலியோர் குழுவினரை வரவேற்று வழிபாட்டை நடத்தி வைத்தார்கள். நல்லூரில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் உத்தரவுப்படி ஏஜெண்ட் திரு. செளந்தர ராஜம் பிள்ளை, திரு. ஆண்ட பிள்ளை, தேவஸ்தானத் தொண்டர்கள் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்துக் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள். திருக்கருகாவூரில் நிர்வாக அதிகாரி திரு. ஜெயச்சந்திரன், நிர்வாக அறங்காவலர், தொண்டர் திரு. கோ. சிவஞானம், ஊர்ப்பொதுமக்கள் ஆகியோர் குழுவினரை வரவேற்று வழிபாட்டை நன்கு நடத்தி வைத்தார்கள். இவ்வாலயத்தில் நடைபெற்று வரும் திருத்தேர்த் திருப்பணிக்குக் குழுவினர் ரூ. 25 நன்கொடை அளித்தார்கள். திருப்பாலைத் துறையில் நிர்வாக அறங்காவலர் திரு. ஆர். இராஜமாணிக்கம், பரம்பரை தர்மகர்த்தர் திரு. தியாகராஜ ராவ், ஊர்ப்பெருமக்கள் ஆகியோர் குழுவினரை பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்தி வைத்து, குழுவினருக்கு மாகேஸ்வர பூசையும் செய்துவைத்து உபசரித்தார்கள். திரு. ஆவூர்ப் பசுபதீச்சரத்தில் நிர்வாக அதிகாரி, திரு. பாஸ்கர சேதுராஜன் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் நன்கு நடத்தி வைத்தார். திருப்பட்டீச்சரத்தில் நிர்வாக அதிகாரி திரு. சுவாமி வேங்கடாசலம், நிர்வாக அறங்காவலர் திரு. கோபால்சாமி செட்டியார் முதலியோர் வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்துக் குழுவினருக்குச் சிற்றுண்டியும், அளித்து உபசரித்தார்கள்.

27—12—65ல் திருச்சத்திமுற்றம், திருப்பழையாறைவடதளி, முழையூர், திருப்பழையாறை, தாராசுரம், திருவலஞ்சுழி, திருக்குடந்தைக்காரோணம் ஸ்ரீ விசுவநாதர்கோயில், ஸ்ரீ சோமநாதர் கோயில், திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் ஸ்ரீ நாகேஸ்வர சுவாமி

கோயில், திருக்குடமூக்கு-கும்பகோணம் ஸ்ரீ ஆதி கும்பேசர் கோயில் ஆகிய தலங்களில் வழிபாடும், சமயப் பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. திருச்சத்திமுற்றம், பழையாறை வடதளி, முழையூர், பழையாறை இந்நான்கு தலங்களிலும் மேற்படி ஆலயங்களின் நிர்வாக அதிகாரி திரு. சி. ஆர். குஞ்சிதபாதம், பட்டீஸ்வரம் ஆலய நிர்வாக அதிகாரி திரு சுவாமி வேங்கடாசலம், திரு. வி. துரைசாமிப் பிள்ளை, ஊர்ப்பொதுமக்கள் ஆகியோர் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும். சமயப் பிரசாரத்தையும் நன்கு நடத்திவைத்துக் காலைச் சிற்றுண்டியும் அளித்து உபசரித்தார்கள்.

குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் திரு. ப. தி. சோ. சிங்காரம் செட்டியார், செயலர் திரு. எஸ். சுந்தரேசஞ் செட்டியார் இருவரும் சத்திமுற்றம் வழிபாட்டில் கலந்து கொண்டு குடந்தைக்குக் குழுவினரை அழைத்தனர். தாராசுரத்தில் நிர்வாக அதிகாரி திரு. பாலசுப்பிரமணியம், திரு. சேதுமாதவ ராவ் முதலியோர் குழுவினரை வரவேற்று ஐதிகச் சிறப்ப வரலாற்றை விளக்கி வழிபாட்டைச் சிறப்பாக நடத்தி வைத்தனர். இங்குக் குழுவினர் சென்ற ஒரு வாரத்திற்கு முன்னர் மூலஸ்தான இலிங்கமூர்த்தியின் மீது மூன்று நாள் வரை ஒரு நாகம் படமெடுத்து இருந்ததாகவும், அந் நாட்களில் பூஜைகள் பாவனையாகச் சந்நிதியில் நடந்தன என்றும், நான்காவது நாள் நல்லெண்ணெய் தீபம் இட்ட பிறகு நாகம் கோமுகை வழியாக வெளியில் சென்றுவிட்டது என்றும், அதுமுதல் கருப்பக் கிருகத்தில் மின்சார விளக்குப் போடப்பட்டுள்ளது என்றும் நிர்வாக அதிகாரியும், சிவாசாரியரும், ஊர் மக்களும் அறிவித்தார்கள். திருவலஞ்சுழியில், திருவலஞ்சுழி, சுவாமிமலை நிர்வாக அதிகாரி திரு. சோமசுந்தரம் வழிபாட்டிற்குத் தக்க ஏற்பாடு செய்திருந்தார். திரு. நீலகண்ட சிவாசாரியர் முதலியோர் குழுவினரை வரவேற்று வழிபாட்டை நன்றாக நடத்திவைத்து ஸ்தல ஐதிகத்தை விளக்கினார்கள். தக்க சமயத்தில் குழுவினருக்கு இளநீர் அளித்து உபசரித்தார்கள்.

கும்பகோணத்தில் குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் திரு. ப. தி. சோ, சிங்காரம் செட்டியார் தமதுஇல்லத்தில். குழுவினருக்கு மாகேஸ்வரபூசை செய்து உபசரித்தார்கள் குடந்தைக் காரோணத்தில் ஸ்ரீ விசுவநாதர் ஆலயத்தில் நிர்வாக அறங்காவலர் திரு. கோபால்சாமி செட்டியார் குழுவினரை வரவேற்று வழிபாட்டை நன்கு நடத்தி வைத்தார்கள்.

குடந்தைக் கீழ்க்கோட்டம் ஸ்ரீ நாகேஸ்வர சுவாமி கோயிலில் நிர்வாக அதிகாரி திரு. கந்தசாமி அவர்கள் குழுவினரை வரவேற்று வழிபாட்டை நல்ல முறையில் நடத்தி வைத்தார்கள், ஸ்ரீ சோமநாதர் ஆலயத்தில் நிர்வாகிகளும், திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரும் குழுவினரை வரவேற்று வழி பாட்டை நன்ருக நடத்தி வைத்தார்கள். ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் ஆலயத்தில் நிர்வாக அதிகாரி, திரு. வேங்கடாசலம். அறங் காவலர்கள், குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர். ஊர்ப்பெருமக்கள் ஆகியோர் குழுவினரை வரவேற்று வழி பாட்டையும், சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்தி வைத்தனர். நிர்வாக அறங்காவலரும், திருக்கூட்டச் செயலர் திரு, எஸ். சுந்தரேசஞ்செட்டியாரும் வரவேற்புரை நிகழ்த்தினர்' சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், திட்டைக்கோயில், சக்கரப்பள்ளி கோயில், பழையாறைக் கோயில் முதலியவற்றை நல்ல முறையில் பராமரிக்க வேண்டிய அவசியத்தை விளக்கி சைவம் தழைக்க அரும்பாடுபட்ட மங்கையர்க்கரசியார் அவ தரித்த பழையாறையில் அவருக்கு நினைவுக் கோயில் கட்ட வேண்டிய முக்கியத்துவத்தைக் கூறி விரைவில் கட்டப்படும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தார்கள். திருச்சத்திமுற்றத் தில் சுந்தரர், மாணிக்கவாசகர் திருவுருவம் செய்துகொடுக்க இசைந்தனர். குழுவினர் பழையாறை வடதளியில் அம்பாள் விரல் திருப்பணிக்கு ரூ, 25/- நன்கொடை அளித்தனர். தொண்டை நாட்டில் சென்னைக்கு அண்மையில் திருவேற்காட்டில் அவதரித்து, கும்பகோணத்தில் சூதாடி அடியவர்களைப் போற்றிய மூர்க்க நாயனுர் திருஉருவத் திருப்பணிக்குக் குழு வினர் ரூ. 108/- நன்கொடையளித்தனர். குடந்தைச் சிவனடி யார் கூட்டத்தினரும், ஆலய நிர்வாகிகளும் குழுவினருக்கு இரவு சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள்.

28—12—65ல் திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசர் ஆலயம், ஸ்ரீ விசுவநாதர் ஆலயம் ஸ்ரீ காசிமடாலயம், திருவாமூர் ஸ்ரீ திரு நாவுக்கரசு நாயனுர் திருக்கோயில் ஆகியவற்றில் வழிபாடும் சமயப் பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. அருணஜடேசர் ஆலயத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் ஆணைப்படி காஷியர் திரு. சுந்தரேசம் பிள்ளை குழுவினரை வரவேற்று வழிபாட்டை நடத்திவைத்துக் குழுவினருக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித் தார். குழுவினர் பிறகு ஸ்ரீ காசி மடாலயத்தில் உள்ள ஸ்ரீ காசி விசுவநாதர் ஆலயம், ஸ்ரீ காசிவிநாயகர்கோயில், ஸ்ரீ சொக்க நாதர் பூசை மடாலயம், தரிசனம் செய்துகொண்டு ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான்

சுவாமிகளைத் தரிசித்தனர். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் குழுவினருக்குத் திருநீறளித்து யாத்திரையின் முக்கியத்துவத்தையும், அடியவர்களின் கடமைகளையும், தருமையாதீனச் சிறப்பையும் விளக்கி அருளாசி வழங்கினார்கள். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளின் அருளுரை குழுவினரின் உள்ளத்தை உருக்கியது குறிப்பிடத்தக்கது.

திருவாமூரில் அறங்காவலர்களான திரு. R. நாராயண ரெட்டியார், திரு. K. இராஜாராம் ரெட்டியார், திரு. N. நாராயண பிள்ளை, அன்றைய உபயதார் பாண்டிச்சேரி, திரு. K. குப்புசாமி முதலியார் ஊர்ப்பொதுமக்கள் ஆகியோர் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும், சமயப்பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்தார்கள். திரு. K. குப்புசாமி முதலியார் குழுவினருக்கு மாகேஸ்வரபூசை செய்து உபசரித்தார்கள். மாலை 5 மணிக்கு ஸ்ரீ அப்பர் ஆலயத்தில் நன்றிபாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் அப்பர் ஆலயத்தில் நடைபெற்று வரும் ஸ்ரீ மாதினியார் சிவபூஜை நிலையத் திருப்பணிக்குக் குழுவினர் ரூ. 501ம், குழுவைச்சேர்ந்த திரு. A. இராஜரத்தின முதலியார் ரூ. 501ம், திரு. T. N. குப்புராவ் ரூ. 101ம் திரு. சி. வி. கிருஷ்ணமூர்த்தி ரூ. 50ம், திரு. அங்கண்ணன் ரு. 20ம் வழிபாட்டரசி திருமதி. ஜெயலக்ஷ்மி அம்மாள் ரூ. 20ம், நன்கொடை அளித்தனர். வெள்ளி சோடசோபசார செட்டுத் திருப்பணிக்கு வழிபாட்டரசி திருமதி. ஜெயலெக்ஷ்மி அம்மாளின் தமக்கையார் ரூ. 101 நன்கொடையளித்தனர். திருமதி. கஸ்தூரி தாமோதரன் ரூ 101ம் திருமதி. வித்துவான். மீனாட்சிசுந்தர சிவை ரூ. 101ம், திருமதி, ஜமுனாபாய் கமலக்கண்ணன் ரூ. 101ம் அளிப்பதாக வாக்களித்துள்ளனர். சிவபூஜை நிலையத் திருப்பணிக்கு T. G. ஏழுமலை நாயகர் ரூ. 501 நன்கொடை அளிப்பதாக வாக்களித்துள்ளார். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் யாத்திரையில் இடம்பெற்ற ஆலய நிர்வாகிகட்கும், தொண்டர்கட்கும் நன்றி தெரிவித்து, திருவருளுக்கும் குருவருளுக்கும் நன்றிமிக்க வணக்கம் தெரிவித்தார்கள். குழுவினர் சார்பில் ஆடவர்கட்காக திரு. K. இராமநாத ஆச்சாரியாரும் திரு. N. R. ஆடலரசும், பெண்களுக்காக வித்துவான். திருமதி. மீனாட்சிசுந்தரசிவையும், தருமையாதீனத்திற்கும், சமயப்பிரசார நிலையத்திற்கும் நன்றி தெரிவித்தார்கள். இரவு 11 மணிக்குக் குழுவினர் நலமாக நிலையம் சேர்ந்து, இறையருளை |வாழ்த்தினர் யாத்திரைத் தலங்களில் ஆங்காங்கும் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், திரு. N. R. ஆடலரசு, திரு. K. இராமநாத ஆச்சாரியார், வித்துவான், திருமதி. மீனாட்சிசுந்தரசிவை

முதலியோர் சமயச் சொற்பொழிவு நிகழ்த்தினர், சங்கீதபூஷணம் தருமபுரம் திரு. P. சுவாமிநாதன் அவ்வத் தலங்களின் தேவாரத் திருப்பதிகங்களை இசையுடன் ஓதியும், ஓதுவித்தும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்த்தி மகிழ்வித்தார், அன்னாருக்குக் குழுவினர் நிலைய ஆண்டு விழாவன்று 60 வெண்பொற் காசுகளும் உயரிய ஆடையும் அளித்துப் பாராட்டினர்.

மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு.

சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்திர சமயப் பிரசாரமும், வழிபாடும் கூடுவாஞ்சேரியை அடுத்துள்ள நந்திபுரம் ஸ்ரீ நந்தீஸ்வரர் ஆலயத்தில் 20—2—66 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிமுதல் 8 மணிவரை சிறப்பாக நடைபெற்றன, நிலைய வழிபாட்டுக் குழுவினர் சார்பில் சுவாமி, அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. கூடுவாஞ்சேரி, நந்திபுரம் மக்கள் பெருந்திரளாகக்கூடி உற்சாகத்துடன் குழுவினரைப் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும், நடத்தி வைத்தனர். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் சுவாமி சந்நிதியில் தேவாரத் திருமுறை ஓதி மகிழ்வித்தார். நந்திபுரம் வாசியும், "திருக்கோயில்" ஆசிரியருமான திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம் ஓ. எல்., அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் சிறு கிராமங்களில் அன்று சமயாசாரியர்கள் சென்று சமய ஒழுக்கங்களைப பரப்பியதுபோல் இன்று தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தார் செய்வது பாராட்டத்தக்கது என்றார்.

வித்துவான் திருமதி. மீனாட்சிசுந்தரசிவை, திருமதி. மீனாட்சி பி. ஏ., பி. எல். சி., பி. டி. இவரும் பக்தி வழியில் பெண்மணிகள் எவ்வளவு தூரம் பணியாற்றியுள்ளனர் என்பதை நாயன்மார்களின் பத்தினிமார்களிலிருந்து எடுத்துக்காட்டித் தற்காலப் பெண்மணிகளும் அவ்வழியைப் பின்பற்ற வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினார்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தமது தலைமையுரையில் ஊர் நன்றாக வளமாக இருக்க வேண்டுமானால் ஊரில் உள்ள கோயில் சுத்தமாகவும், நித்திய பூசை நன்கு நடைபெறுவதாகவும் அமையவேண்டும் என்றும், மக்கள் அவரவர் சமய முறைப்படி சிறு அனுட்டானமாவது அவசியம் செய்துவரவேண்டும் என்றும், வாரம் ஒருமுறை ஊரவர் அனைவரும் ஒன்றுகூடி ஆலயத்தில் வழிபாடு நிகழ்த்த

வேண்டும் என்றும் இவ்வமயம் சமயத் தத்துவக் கருத்துக்களைத் தக்கார் வாயிலாகக் கேட்டு விளக்கம் பெறவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

திருவாமூரில் மாசி மாதச் சதய விழா.

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் (திருநாவுக்கரசு நாயனார்) அவதாரத் தலமாகிய திருவாமூரில் 21—2—1966 மாசி மாதச் சதய விழா சென்னை திரு. கே. சி. நாகலிங்க முதலியார் உபயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலையில் ஸ்ரீ அப்பர் சுவாமி ஸ்ரீ திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ பசுபதீஸ்வரர், புகழனார், மாதினியார், திலகவதியார் முதலிய மூர்த்திகட்கு அபிஷேக ஆராதனைகளும், மதியம் அடியார்கட்கு மாகேஸ்வர பூசையும், மாலையில் உள்ளூர், வெளியூர் அன்பர்களால் உழவாரப்பணியும், கூட்டு வழிபாடும், அப்பருக்குச் சோடசோபசார தீபாராதனையும் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளால் அப்பர் தேவார சொற்பொழிவும் நடைபெற்றன.

ஐந்நூறுக்கும் மேற்பட்ட உள்ளூர், வெளியூர் பக்தர்கள் அப்பர் பெருமானைத் தரிசித்துப் பிரசாதம் பெற்றனர். அப்பர் ஆலயத்தில் கட்டப்பெற்று வரும் ஸ்ரீ மாதினியார் சிவபூஜை நிலையத் திருப்பணிக்கு நன்கொடை அளித்து வருவோர் வரிசையில் இம்மாதச் சதயத்தில் ஏரிப்பாளையம் திரு, என். நாராயணப் பிள்ளை ரூ. 100ம், பரதூர் இரா. இராஜேஸ்வரி ரூ. 50ம் நன்கொடை அளித்தார்கள். மற்றும் பலர் சிறுதொகை நன்கொடையளித்தனர்.

விசேஷ நாட்கள்

11—3—66 முதல் 10—4—66 முடிய

19—3—66	பிரதோஷம்
20—3—66	தண்டியடிகள் திருநக்ஷத்திரம்
23—3—66	யுகாதிப் பண்டிகை
26—3—66	வேலூர் கிருத்திகை
27—3—66	நேசநாயனார்
29—3—66	கணநாதநாயனார்
30—3—66	ஸ்ரீராமநவமி
31—3—66	முனையடுவார் நாயனார்
3—4—66	பிரதோஷம்
4—4—66	பங்குனி உத்தரம்.
7—4—66	காரைக்காலம்மையார்

சென்னை, தருமை ஆதீன சமயப் பிரசார நிலையம் 12-வது ஆண்டு நிறைவு விழா,

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி. கனம் பி. எஸ். கைலாசம் அவர்களின் தலைமையுரை

தம்பிரான் அவர்களே! பெரியோர்களே!

1965-ம் ஆண்டு நிறைவில் இந்நிலையத்தின் 12-வது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடப்படுகிறது. சுமார் 20 ஆண்டுகட்கு முன்பெல்லாம் ஆண்டுத் தொடக்கத்தில் கீழே உள்ள உத்தியோகஸ்தர்கள், மேலதிகாரிகளைக் கண்டு மாலை சூட்டுவது வழக்கமாயிருந்தது. திருப்புகழ்மணி திரு. டி. எம். கிருஷ்ணசாமி ஐயரவர்களைப் போன்ற பெரியவர்கள் ஆண்டுத் தொடக்கத்தில் ஆண்டவனைக் கண்டு மாலை சூட்டவேண்டுமென்ற உயரிய பழக்கத்தை 20 ஆண்டுகளாக ஏற்படுத்தி விட்டார்கள். அது முதல் டிசம்பர் 31ந் தேதியன்றே மக்கள் எல்லோரும் திருத்தணி, திருப்பதி முதலிய தெய்வத் தலங்கட்குச் சென்று திருப்புகழ் பாடித் தரிசித்து வருகின்றனர். மக்களிடையில் இப்பொழுது கடவுள் பக்தி அதிகம் வளர்ந்திருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆதீனத்தைப் பற்றியும், நிலையப் பணிகளைப் பற்றியும் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இந்தப் பிரசார நிலையம் 12 ஆண்டுகளாக நல்ல முறையில் பல துறைகளிலும் சமயப் பிரசாரம் செய்து வந்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். தருமபுர ஆதீனம் 27 கோயில்களை வேதாகம முறைப்படி நன்கு பரிபாலித்து வருகிறது. அக்கோயில்களில் தெய்வீக சக்தியை நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள். சீகாழி, வைத்தீஸ்வரன்கோயில் முதலிய ஆதீனக் கோயில்களை நேரில் தரிசிக்கும் வாய்ப்புக்கிடைத்தபோது கண்டு தரிசித்து மகிழ்ந்தேன். தெய்வ ஸ்தாபனங்களை நன்றாகப் பரிபாலித்து வருவதற்காக சைவர்கள் கடமைப்பட்டுள்ளோம்.

தஞ்சை ஜில்லாவில் உள்ள இந்த ஆதீனம் அப்பகுதியில் உள்ள கோயில்களைப் பரிபாலிப்பதோடு எல்லா ஜில்லா வாசிகளும் வசிக்கும் தமிழகத்தின் தலைநகராகிய சென்னையிலும் சமயப் பிரசாரம் செய்வதற்கு ஒரு ஸ்தாபனத்தை நிறுவி அதன் வாயிலாகச் சமயத்தத்துவம், தமிழ், சம்ஸ்கிருதம், தேவார

திருவாசகம் ஆகியவற்றைப் பிரசாரம்செய்து வருவது போற்றத் தக்கது. ஆதீனக் கோயில்களில் நடைபெறும் விசேஷ விழாக் களின் பிரசாதங்களைச் சென்னையில் வாழ்வோருக்கும் கிடைக்கு மாறு செய்வது பாராட்டத்தக்கது. தம்பிரான் அவர்கள் வரவேற்புரையில் குறிப்பிட்டதுபோல் இங்குப் பயிற்சிபெற்ற ஒருவர் எங்கள் வீட்டில் குழந்தைகட்குத் தேவாரம் கற்பித்து வருகிறார். என் செவிகளில் தேவாரம் தினமும் முழங்கிக் கொண்டிருக்கிறது.

சமீப காலத்தில் சுமார் பத்தாண்டுகளாகச் சைவ, வைணவ ஒற்றுமை வளர்ச்சியடைந்து வருகிறது. காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் போன்ற பெரியவர்கள் ஒற்றுமையை வளர்த்து வருகிறார்கள். வாடிகன் நகரில் உள்ள கிறிஸ்தவ மதத்தலைவர் பம்பாய் வந்தபோது நமது சமயத் தலைவர்கள் போப்பாண்ட வரும் ஆஸ்திக மதத் தலைவர் ஆகையால் இந்திய மக்கள் அனை வரும் அன்புடன் அமைதியாக வரவேற்க வேண்டுமென்று அறிக்கை விடுத்தார்கள். இது வரவேற்கத்தக்கது. கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் எல்லோரும் ஒரு குலம், இக்கருத்தை நம் சமயத் தலைவர்கள் போப்பாண்டவர் வந்தபோது நிலை நாட்டினார்கள்.

இந்த நிலையத்தில், தமிழ் வித்துவான் வகுப்பு, சம்ஸ்கிருத வகுப்பு, தேவார வகுப்பு முதலியவற்றைப் பேதமில்லாமல் நடத்தி வருவது போற்றக்கூடியது. வேதங்களில் சொல்லப் பட்டனவும், நாயன்மார்கள், ஆழ்வார்களால் சொல்லப்பட்டன வும் பொதுவாகக் கருத்து ஒற்றுமையுடையனவாகவே காணப் படுகின்றன. அவரவர் மதத்தில் அவரவர் பக்தி செய்து பயன் அடையலாம். வேற்று மதங்களில் துவேஷம் கூடாது.

ஆதீனத்தார் "ஞானசம்பந்தம்" என்ற மாதப் பத்திரிகை ஒன்று நடத்தி வருகிறார்கள். 24 ஆண்டுகளாக அப்பத்திரிகை தமிழிலக்கியம், சமய இலக்கியம் முதலியவற்றைக் கட்டுரையாக வெளியிட்டுச் சிறந்த பணியாற்றியுள்ளது. அதற்கு இப் பொழுது 25-வது ஆண்டு தொடங்கியுள்ளது. அதன் முதல் இதழ் வெள்ளிவிழா மலராக வெளிவந்துள்ளது. அதனை வெளி யிடும் பொறுப்பையும் எனக்கு அளித்துள்ளார்கள். அப்பத்தி ரிகையின் சிறப்பையெல்லாம் திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர் கள் விளக்கம் செய்தார்கள். அவ்வெள்ளிவிழா மலரை வெளியிடு வதில் மகிழ்ச்சியடைகிறேன். எல்லோருக்கும் எனது நன்றி.

சென்னை மாநில செய்தித்துறை அமைச்சர்

கனம். G. பூவராகன் அவர்கள் தொடக்கவுரை

(31—12—65)

தலைவர் அவர்களே! தவத்திரு சுவாமிகள் அவர்களே!

பெரியோர்களே!

நன் மார்கழித் திங்களில் சமய நெறியைப் பரப்புவதற்குப் பிரச்சாரம் தேவை வர்த்தக ஸ்தாபனங்களுக்குப் பிரச்சாரம் தேவை. மொத்தத்தில் லாப நோக்கத்தோடு எதையும் செய்பவர்களுக்குப் பிரச்சாரமும், விளம்பரமும் தேவை. ஆனால் பக்தி மார்க்கத்தைப் பரப்புவதற்கும், மக்களை சமய வழிகளில் நடத்திச் செல்வதற்கும் பிரச்சாரம் தேவையா என்று கேட்டால் இன்றைய சூழ்நிலைகளை வைத்துத் தேவைதான் என்ற முடிவுக்கு நாம் வரவேண்டி இருக்கிறது.

சைவசமயம் என்றைக்கும் பிரச்சாரத்தையும், விளம்பரத்தையும் விரும்பியதில்லை. மெய்ஞ்ஞான நெறிகளைப் போதிப்பதோடு, இறைவனின் திருவடிகளை அடைவதற்கு ஏற்ற வகையில் மக்கள் மனம் பண்படுமாறு நல்லுரைகள் கூறுவதோடு மெய்யடியார்கள் தங்களுடைய கடமை முடிந்தது என்றே கருத வேண்டும் என்பதுதான் சைவ சமயத்தின் சித்தாந்தம். ஆனால் தவிர்க்கமுடியாத சில காரணங்களால் அது தனது சித்தாந்தத்தைச் சற்று மாற்றி, சைவ நெறிகளைப் பிரச்சாரம் செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு வந்திருக்கிறது.

திருஞானசம்பந்த சுவாமிகள் காலத்தில் அவர் சமண மதத்தினரோடு வாதித்தார். பிற மதத்தினரோடு வாதிட்டு, சைவ மதந்தான் சிறந்த மதம் என்று நிரூபிக்க வேண்டும் என்னும் குறுகிய எண்ணம் ஞானசம்பந்தருக்கு இல்லை. ஆனால் அப்போதைய சூழ்நிலையில், சமண மதத்தினர், அப்போதிருந்த அரசர்களின் ஆதரவைப் பெற்று, அந்த அதிகாரத்தை வைத்துத் தமது மத நெறிகளை மக்கள் மேல் திணிக்க முனைந்தனர். சமண மதத்தினரின் தீய முயற்சியால் மதுரை சொக்கேசர் ஆலயத்தின் பூஜை நடத்துவதுகூட நிறுத்தப்பட்டது. இதையெல்லாம் காணப்பொறுத சம்பந்தர் சமணர்களோடு வாதிட்டு, சைவ சமயந்தான் சிறந்தது என்று மெய்ப்பித்து, சமண மதத்தினரை முறியடிக்க வேண்டிய கால கட்டத்திற்கு வந்தார்.

அதற்குப் பின்னர் நெடுங்காலம் கழித்து, மேலை நாட்டினர் நம் நாட்டில் காலடி வைத்ததைத் தொடர்ந்து இங்கே கிறிஸ்தவ

மதம் பரவியது. ஆங்கிலேயர்கள் தங்களுடைய மதத்தைத் திட்டமிட்டுப் பரப்பினுர்கள். ஒரு அரசியல் ஸ்தாபனத்தைப் போல, கிறிஸ்தவ மதம் அங்கங்கே தனது கிளைகளை வைத்து, பணியாட்களை வைத்துத் தன்னுடைய நெறிகளைப் பரப்பத் தொடங்கியது. ஆகவே சைவ மதம் மறுபடியும் ஒரு முறை தன்னைப் பிரச்சாரக் களத்தில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து சமயநெறிகளைப் பரப்புவதற்குப் பிரச்சாரம் தேவைதான் என்ற தவிர்க்க முடியாத நியதி ஒரு பொதுவான உண்மையாகி விட்டது.

ஆனல் இந்தப் பிரச்சாரத்தைச் செய்வதற்கு ஏற்ற நிறுவனங்கள் எவை என்பதை நாம் இப்போது ஆராய வேண்டும், தருமபுர ஆதீனம் இங்கே ஒரு பிரச்சார நிலையம் வைத்துள்ளது. இது மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம் என்று சொல்லப்படுகிறது. பொதுவாக மடம் என்ருல் ஆதி நாளில் அது சமூகத் தொண்டு செய்வதற்கான ஒரு மைய கேந்திரமாகவே கருதப்பட்டு வந்தது. நால்வர்கள் இந்த நோக்கத்தோடுதான், சமூகப் பொதுப்பணி ஆற்றவேண்டும் என்னும் நல்லெண்ணத்தோடுதான் மடங்களை நிறுவினுர்கள். வழிப்போக்கர்கள் தங்கவும், ஏழை எளியவர்களுக்கு உணவு தரவும், நலிந்து, மெலிந்தோர்க்கு நன்மைகள் செய்யவும் மடங்கள் உண்டாக்கப்பட்டன. பொதுவில் ஈசனது அடியார்களின் கடமையே பிறருக்குப் பணிசெய்வதுதான்என்று நம் முன்னேர்கள் கூறினுர்கள். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று பாடினுர் திருநாவுக்கரசு சுவாமிகள். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறென்றறியேன் பராபரமே' என்ருர் தாயுமானவர்.

"அனைத்துயிரும் ஒன்றென்றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
பொய் வஞ்சம் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பராகில்
செய்தவம் வேறென்றுண்டோ?"

என்ருர் ஒரு பெரியவர். "நீடிய பிணியால் வருந்துவோரைக் கண்டு உளம் நெகிழ்ந்தேன்" என்ருர் வள்ளலார். இவ்வாறு சைவசமய குரவர்கள் அனைவரும் பொதுப்பணி செய்வதற்காகவே, உயிர்களின் நல்வாழ்வுக்காகவே இறைவன் அருளை வேண்டிப்பாடினர். தங்களால் இயன்ற பணியாற்றினர். இதே பணியைத்தான் மடங்கள் செய்துவந்தன. மற்றபடி சமயத்தைப் பிரச்சாரம் செய்வது என்பது, அதாவது பக்திநெறியைப் பரப்பு

வது என்பது மடாலயங்களின் ஓய்வுநேர வேலைகளாக இருந்தன. ஆனால் காலவெள்ளத்தில் இது தலைகீழாக மாறி விட்டது. மடாலயங்கள் இன்று சமய நெறிகளைப் பரப்பு வதிலும், பக்திமார்க்கத்தை எடுத்துச் சொல்வதிலும் தான் அதிகக்கவனமாய் இருக்கின்றன.

பக்திமார்க்கத்தைப் பரப்புவதே ஒரு பொதுப்பணி என்று சொல்லலாம். அதெல்லாம் வாதத்திற்காகச் சொல்லப்படும் கருத்துக்கள். ஈசன், ஏழைக்கு ரொட்டி உருவில் வருகின்றான். இப்படி ஒருபழமொழி மேலைநாட்டில் உண்டு. அதுபோல் ஏழையின் வயிற்றுப்பசியை அகற்றி, அவனுடைய வாழ்வுசெழிக்க முடிந்தஅளவு உதவி செய்தால்தான் அவனுடைய கவனத்தை ஆன்மிகத்துறையில் திருப்ப முடியும்.

தருமபுர ஆதீனம் தமிழகத்திலுள்ள பழம்பெரும் ஆதீனம் ஏழையின் துயர் துடைப்பதே இறைபணி என்று அறிந்து பல்லாண்டுகளாக அது மக்கள் மத்தியில் மக்களின் தேவைகளை அறிந்து நற்பணி ஆற்றிவருகிறது. அதனுடைய கிளையாக சென்னையிலுள்ள மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம் சிறந்த முறையில் இயங்கி வருகிறது. பக்தகோடிகளும், பொதுப் பணியில் நாட்டம் கொண்டவர்களும் இந்நிலையத்தின் வளர்ச் சிக்குத் தங்களாலான எல்லா உதவிகளையும் செய்யக் கடமைப் பட்டவர்களாவர். வணக்கம்.

"ஞானசம்பந்தம்"

சந்தாதாரர்களுக்கு ஓர் வேண்டுகோள்

"ஞானசம்பந்தம்" திங்களிதழ் 24 ஆண்டுகளாகச் சைவமும் தமிழும் பரப்பிவருவது உலகம் அறிந்தது. தற்பொழுது இருபத் தைந்தாம் ஆண்டிலும் சமயப்பொருள், இலக்கணம், இலக்கியம் முதலியவற்றுடன் தெளிவான கட்டுரைகளை வெளியிட்டுவரு கிறது. தாள் விலையேற்றம் முதலிய தவிர்க்கமுடியாத காரணங் களால் சந்தாத் தொகை சிறிது உயர்த்தப்பட்டுள்ளது. சந்தா தாரர்கள் இச்சிறு சந்தா உயர்வை ஏற்றுச் சந்தா செலுத்தி, ஞானசம்பந்தம் பெற்றுப் பயன் பெறுவார்களாக.

ஆண்டுச் சந்தா :- உள்நாடு ரூ. 3—00 வெளிநாடு ரூ. 4—00

செயலாளர் : "ஞானசம்பந்தம்" காரியாலயம், தருமை யாதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(விசுவாவசுஸு பங்குனிமீ 1ஷ முதல் 31வ முடிய)

(14—3—66 முதல் 13—4—66 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி நான்கு பாதங்களும் சுப சந்தோஷங்களைத்தரும். ஆரோக்யம் உண்டாகும். பரணி நான்கு பாதங்களும் தொழில் ஏற்றம் ஏற்படும். நஷ்ட தனங்கள் தானாக வந்து சேரும். குடும்பம் ஓங்கும். கார்த்திகை முதல் பாதம் சில்லரையான மனஸ்தாபங்களை உண்டுபண்ணும். சொற்ப நஷ்டம் காட்டும். சனி, ஞாயிறு சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மேல் பதவிகளைத்தரும். இருப்பிடம் மாறும். குடும்பம் ஓங்கும். புத்திராதிகளால் மேன்மை உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபத்தை உண்டுபண்ணும். நூதன பிரபு தரிசனமும், பரீக்ஷையில் முதன்மையும் கீர்த்தி பத்திரமும் கிடைக்கச்செய்யும். வம்ச விருத்தி ஏற்படும். ஜீவனம் ஓங்கும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கச்செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

, புனர்பூசம் 4ம் பாதம் வித்தியாவிருத்தியைத்தரும். தெய்வ சக்தி ஓங்கும். பூசம் நான்கு பாதமும் ஆயில்யம் நான்கு பாதமும் மிச்ரமான பலனைத்தரும். கிராமம் பூமிகளில் லாபம் குறை காட்டும். சஞ்சாரபலன் அதிகமாகும். தெய்வபலம் காக்கும் வெகுநாளாய் எதிர்பார்த்து நடைபெறாத கிரய விக்ரயங்கள் நடைபெறும். விவகாரம் ஜெயிக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் சுபமேயாகும். ஆரோக்யம் தரும். விவாகாதி சுப சந்தோஷங்களை உண்டுபண்ணும். ஜீவனம் ஓங்கும். நஷ்டதனங்கள் தானாக வந்துசேரும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கச்செய்யும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத்தரும். வியவகாரம் ஜெயிக்கும். எதிர்பாராத செலவினங்கள் ஏற்படச் செய்யும். ஆரோக்யத்தைத் தரும். சஞ்சாரம் அதிகமாகும். தெய்வசக்தி ஓங்கும். நூதன முறையில் தொழில்களும் மேலோர் பெரியோர் நேசமும் கிடைக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

துலாராசி 9 பாதங்களும் ராஜயோகத்தைத்தரும். உலக பிரசித்தியை உண்டுபண்ணும். எதிர்பாராத லாபங்கள் கிடைக்கச்செய்யும். தொழில் ஓங்கும். தெய்வசக்தி முன்னின்று காக்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும் புதன் வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$-அனுஷம்-கேட்டை

விசாகம் 4ம் பாதமும் அனுஷம் நான்கு பாதங்களும் சுபமிராது. அடிக்கடி வீண் அலைச்சல்களையும் ஆரோக்யக் குறைவையும் தரும். செலவினங்கள் அதிகமாகும். கேட்டை நான்கு பாதங்களும சுபமேயாகும். குடும்பத்தில் மங்கள காரியங்கள் ஏற்படசெய்யும். பந்துமித்ராளுடைய சேர்க்கை ஏற்படும். கீர்த்திபத்திரம் கிடைக்கும. புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனூர்ராசி 9 பாதங்களும் சுபமாகும். ஆரோக்யம் தரும். நஷ்டமான பொருள்கள் வந்துசேரும், குடும்பம் ஓங்கும். உலக பிரசித்தி ஏற்படச்செய்யும், சனி, ஞாயிறு சுபமாகும்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadayur.

We, as a group from Vellore, visited this temple this evening with our families. The temple is kept spick and span and the environment in and around the temple is very condusive for worship, thanks to the devoted, sincere and selfless service of the Maha Sannidhanam of Dharmapuram Adhinam.

The temples under the management of the Maha Sannidhanam are really a model for their religious institutions to follow.

The authorities serving under the Maha Sannidhanam, were kind and cordial to us and they explained to us the importance of the temple. We were deeply impressed and we carry with us an immense reservoir of good will and regard for the Maha Sannidhanam of Dharmapuram Adhinam.

(Sd.) Natarajan, Banker, Vellore
(Sd.) P. Janakiraman,
10. Stringer St. Madras
(Sd.) M. Ramachandra Chettiar
(Sd.) Mahalingam
(Sd.) T. சந்த்ரசேகரன் வாத்தியார்
(Sd.) N. Venkatesa Perumal

25—2—66.

The Industrial, Chemical Works
(Private) Ltd., Vellore,
N. A. Dt.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும், விசேஷமான நன்மைகளை உண்டு பண்ணும். ராஜாங்க மூலமாய் சகல காரியங்களும் ஜெயிக்கும். தொழில் ஓங்கும். விவசாயத்தில் நூதன முறையில் பலன் உண்டுபண்ணும். மேலோர் பெரியோர்களுடைய அன்பும் வரத்தும் கிடைக்கச்செய்யும். குடும்பம் ஓங்கும். ஆரோக்யம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½. சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி பலன் மிச்ரமாகும். ஆரோக்யக் குறைவை கொஞ்சம் உண்டுபண்ணும். புத்திராதிகளால் சந்தோஷம் உண்டாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்களில் கிரய விக்ரயங்கள் ஏற்படும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மேலான பதவியைத்தரும். ஜீவனம் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும். தெய்வபலம் முன்னிற்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். கீர்த்திபத்திரம் கிடைக்கச்செய்யும். உலகப் பிரசித்தி ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதம் தாபம் ஜாஸ்தியாகும். ஹிமாலய பிரதேசங்களிலும் வடமேற்கு மேற்கு மாகாணங்களிலும் இந்தியாவுக்கு நேர் வடக்கில் இருக்கும் த்வீபாந்தரங்களிலும் பலமாறுதல்களைத்தரும். பிரதான புருஷர்கள் மாறுவார்கள் ; துர்பிக்ஷத்தாலும் இயற்கைக் கோளாறுகளாலும் பலவிதமான சிரமங்களை ஜனங்கள் அனுபவிக்க நேரும். ஒவ்வொரு நகரம் பட்டணம், கிராமம் தேசம் முதலிய இடங்களில் உள்ள ஆஸ்திக ஸஜ்ஜனங்கள் பெரியோர்கள், கனதனவான்கள், தெய்வ சக்தியை விருத்திசெய்து கொண்டு ஆங்காங்கு தேவாலய வழிபாடுகளும் மகாயக்ஞங்களும்; சதா செய்துகொண்டே வர அந்தந்த பருவ காலங்களில் ஏற்படக் கூடிய வர்ஷம் முதலானவைகள் சரியான காலத்தில் ஏற்பட்டு உலகத்தை சுபிக்ஷமடையச் செய்யும்.